பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 7 சனிக்கிழமை (23.07.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :239

# பொதுவேலைத் திட்டத்தின் கீழ் செயற்படும் அரசின் கோரிக்கையை ஐ.தே.க.நிராகரிப்பு

## சந்திரிகாவைச் சந்திக்கும்போது ரணில் திட்டவட்டமாகத் தெரிவிப்பார்

கொழும்பு,ஜூலை23

**பொதுவான அரசியல் வேலைத்திட்டம் ஒன்றின் கீழ் அரசுடன் சேர்ந்து பணியாற்ற முன்வருமாறு அரசுத் தலைவி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் விடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் வேண்டுகோளை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நிராகரிக்கும் எனத் தெரியவருகிறது.**

**அடுத்து வரும் தினங்களில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேரில் சந்திக்கும்போது இவ்விடயத்தைத் திட்டவட்டமாகத் தெரிவித்துவிடுவார் எனத் தெரியவருகிறது.**

பொதுவான அரசியல் வேலைத்திட்டமொன்றிற்கு முன்வருமாறு ஜனாதிபதி சந்திரிகா விடுத்திருக்கும்வேண்டுகோளை நிராகரிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்திருப்பதாக அந்தக் கட்சியின் உயர்மட்ட வட்டாரங்கள் நேற்று உதயனுக்குத் தெரிவித்தன.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதி கொண்டிருக்கும் நிலைப்பாடே இதற்கான காரணமென்றும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## செல்லக்கிளி அம்மான் நினைவு தினம் இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை23

மாவீரர் லெப்டினன்ட் செல்லக்கிளி அம்மானின் 22 ஆம் ஆண்டு நினைவுநாள் இன்று சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படுகிறது.

இதனையொட்டி யாழ்.பலாலி வீதி தபாற்பெட்டிச் சந்தியில் உள்ள செல்லக்கிளி அம்மான் நினைவுத் தூபி முன்றிலில் இன்று முற்பகல் 9.30 மணிக்கு நினைவு நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதில் பொதுச் சுடரேற்றல், அகவணக்கம்,ஈகச்சுடரேற்றல், மலரஞ்சலி, நினைவுரைகள் என்பன இடம்பெறும்.

மாலை நிகழ்வு நல்லூர் சட்டநாதர் வீதியில் உள்ள இளம் கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறும். இதில் நினைவுரைகளும், எழுச்சி நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஓ)

## பொதுக்கட்டமைப்புக்கு நிதி தருவதற்கு ஜப்பான் மறுத்தமை அதிர்ச்சி தருகிறது

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று தூதரிடம் நேரில் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை23

பொதுக்கட்டமைப்பு உருவாவதற்கு ஓடித் திரிந்து முயற்சித்த ஜப்பான் பின்னர் பொதுக் கட்டமைப்புக்கு நேரடியாக நிதி தரமாட்டாது என அறிவித்தது எமக்குப் பெரும் அதிர்ச்சியும் அதிருப்தியும், கவலையும் அளித்துள்ளன.

இவ்வாறு ஜப்பானிடம் தெரிவித்திருக்கின்றது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு .

கூட்டமைப்பின் எம்.பிக்கள் நேற்றுக் கொழும் பில் ஜப்பானின் பதில் மற்றும் பிரதித் தூதுவரான ஹிரோஷி கருமேயைச் சந்தித்த போதே அவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வம் அடைக்கலநாதன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரே நேற்று ஜப்பானியத் தூதுவரைச் சந்தித்தனர்.

அப்போது அவர்கள் ஜப்பானியத் தூதுவரிடம் தெரிவித்ததாவது :-

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அச்சு உடைந்ததால் மணல் லொறி தடம்புரண்டு கிளீனர் மரணம்

### கரவெட்டியில் நேற்றுப் பரிதாபம்

கரவெட்டி,ஜூலை23

மணல் ஏற்றிவந்த லொறியின் அச்சு (றொட்) உடைந்து லொறி தடம்புரண்டதில் அதில் பயணம் செய்த உதவியாளரான - கிளீனரான இளைஞர் நசியுண்டு மரணமானார்.

இந்தப் பரிதாபச் சம்பவம் நேற்று பிற்பகல் 3.30மணியளவில் கரவெட்டி கலிகைச் சந்திப் பகுதியில் இடம்பெற்றது.

சம்பவம் பற்றி தெரிவிக்கப்படுவதாவது:-

மணற்காடு பகுதியிலிருந்து மணல் ஏற்றி வந்த லொறி மந்திகைச் சந்தியூடாக கலிகைச் சந்தி நோக்கிப் பயணித்தது என்றும் -

கலிகைச் சந்தியைத் தாண்டிய சில நிமிட நேரத்தில் லொறியின் றொட் உடைந்ததை அடுத்து லொறி தடம்புரண்டது என்றும் -

அச்சமயம் சாரதியின் இடப்பக்கமாக இருந்த உதவியாளர், வெளியே தூக்கி வீசப்பட்டதில் லொறியினுள் நசியுண்டு அந்த இடத்திலேயே மரணமானார் என்றும் - கூறப்பட்டது.

மானிப்பாயைச் சேர்ந்த எஸ்.காந்தன் (வயது - 26) என்பவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் என லொறியின் உரிமையாளர் தெரிவித்தார்.

இதற்கிடையே - லொறி தடம்புரண்ட செய்தி அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த லொறியின் உரிமையாளர் உயிரிழந்தவரின் சடலத்தைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார் என்றும் -

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மிருசுவில் படுகொலை வழக்கை விசாரிக்க புதிய நீதிபதிகள்

### 'ட்ரயல் அட்பார்' மன்றுக்கு நியமனம்

கொழும்பு,ஜூலை23

மிருசுவிலில் சிறுவர் உட்பட ஏழு அப்பாவிப் பொதுமக்கள் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இராணுவத்தினர் அவருக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள 'ட்ரயல் அட்பார்' நீதிமன்ற வழக்கை விசாரிப்பதற்கு மூன்று புதிய நீதிபதிகளை பிரதம நீதியரசர் நியமித்துள்ளார்.

இந்த வழக்கை முன்னர் விசாரித்து வந்த 'ட்ரயல் அட்பார்' நீதிமன்றின் மூன்று நீதிபதிகளுள் ஒருவரான எஸ்.ஐ.இமாம் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக பதவி உயர்வு பெற்றுச்சென்றுவிட்டார். மற்றொரு நீதிபதியான சரத் அம்பே பிட்டிய சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். மூன்றாவது நீதிபதியான குமார் ஏகரத்ன ஒழுங்கு நடவடிக்கைச் செயற்பாடு காரணமாக சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இந் நிலையில் இந்த வழக்கு விசாரணை 2003 ஆம் ஆண்டிலிருந்து நடைபெறாமல் இருந்து வருகின்றது.

இப்போது இந்த வழக்கை நிறுத்தப்பட்ட இடத்திலிருந்து தொடர்ந்து விசாரணை செய்வதற்காக மூன்று புதிய நீதிபதிகளை பிரதம நீதியரசர் நியமித்துள்ளார்.

நீதிபதிகள் உபாலி அபேரத்ன, தீபாலி விஜேசுந்தர, சுனில் ராஜபக்ஷ ஆகியோரே

(16 ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகளின் பாதுகாப்பான பயணம் குறித்து நாளைக்கிடையில் நல்ல தீர்வு

கொழும்பு,ஜூலை23

அரச கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளின் பாதுகாப்பான பயண ஏற்பாடு தொடர்பாக நாளைமறுதினம் திங்கட்கிழமைக்கு இடையில் நல்லதொரு தீர்வுகிட்டும்.

- இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார் இலங்கைக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரி ஒருவர்.

கண்காணிப்புக் குழுவின் தலைவர் நேற்று இலங்கை அரசின் சமாதானச் செயலகப் பிரதிநிதிகளையும் பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகளையும் சந்தித்துப் பேசினார்.

அப்போதே இப்பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காணும் விட்டுக்கொடுப்புத் தென்பட்டதாக அவர் சொன்னார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் நியமனத்தை விரைவுபடுத்தக் கோரி மலையகம் முழுவதும் திடீர் ஆர்ப்பாட்டங்கள்

### மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் வீதியில் இறங்கிக் கோஷம்

ஹற்றன்,ஜூலை23

பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் ஆசிரியர் நியமனங்களை வழங்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளை மேலும் விரைவுபடுத்தும் படியும், அவற்றை மலையகத் தமிழ் இளைஞர், யுவதிகளுக்கே வழங்கும்படியும் வலியுறுத்தி மலையகம் எங்கும் நேற்றுத் திடீர் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

நுவரெலியா, பதுளை, பண்டாரவளை, அப்புத்தளை, தலவாக்கலை, புசல்லாவை, அக்கரப்பத்தனை, ஹற்றன், மஸ்கெலியா, பொகவந்தலாவை, கொட்டகலை என மலையகத்தின் முக்கிய நகரங்கள் அனைத்திலும் தோட்டப் புறங்களிலும் உள்ள தமிழ் மொழி மூலப் பாடசாலைகளின் மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும், ஆசிரியர்களும் வீதிக்கு இறங்கி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மலையக மாணவர் முன்னணி இந்த ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்திருந்தது. பகல் 10.30 மணிமுதல் மாணவர்கள் வீதிக்கு இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஹற்றன், மஸ்கெலியா, தலவாக்கலை, கொட்டகலை, அக்கரப்பத்தனை போன்ற இடங்களில் மாணவர்களும், ஆசிரியர்களும் பதாகைகளுடன் ஊர்வலமாக நகரின் மத்திய பகுதிகளுக்குச் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்று எமது பிராந்திய செய்தியாளர்கள் அறிவிக்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மலையக ஆசிரியர் நியமனம் மற்றொரு மனு நீதிமன்றத்தில்

கொழும்பு,ஜூலை23

மலையகத்தில் ஆசிரிய நியமனம் வழங்குவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யக்கோரி நேற்று உயர்நீதிமன்றத்தில் மற்றொரு அடிப்படை உரிமைமீறல் மனு தாக்கல் செய்யப்பட்டது.

கண்டி, மடுல்கல தோட்டத்தைச் சேர்ந்த அப்துல் முத்தலிப் முஹமட் சிராஜ் என்பவரின் சார்பிலேயே இந்த அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவில் கல்வி அமைசின் செயலாளர் தாரா டி மெல், சட்டமா அதிபர் ஆகியோர் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மலையக ஆசிரிய நியமனங்கள்

# விட்டுக்கொடுப்பதே முஸ்லிம்களின் மனிதாபிமானப் பங்களிப்பாகும்!

பொகவந்தலாவை,ஜூலை23

மலையக இளைஞர், யுவதிகளுக்கான ஆசிரிய நியமனத்தில் தோட்டப்புற மக்களின் கல்வி நிலையை மனதில் கொண்டு அவர்களுக்கு விட்டுக்கொடுப்பதே சிந்திக்கத் தெரிந்த மனிதாபிமானம் உள்ள - முஸ்லிம் தலைவர்கள் ஆற்ற வேண்டிய பங்களிப்பாகும்.

மலையக மக்கள் முன்னணித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

ஆசிரிய நியமனத்திற்கான விண்ணப்பத்தை தடுக்க நினைக்கும் முயற்சி தோட்ட பாடசாலைகளின் அவலநிலையை புறக்கணித்து உதாசீனம் செய்யும் செயலாகும்.

முஸ்லிம் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால், தோட்டப் பாடசாலைகளுக்கு முஸ்லிம் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதனால் ஏற்பட்டுவருகின்ற பாதிப்புகளையே சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தோட்டப் பாடசாலைக்கு முஸ்லிம் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதனால் அவர்களால் சமய பாடங்களை நடத்த முடிவதில்லை. அத்தோடு அவர்களின் தமிழ் உச்சரிப்பு தோட்டப் பாடசாலையில் ஆரம்பக்கல்வி பயிலும் குழந்தைகளுக்குப் புரிவதில்லை.

இவைகளைவிட ஏற்கனவே தோட்டப் பாடசாலைகளுக்கு நியமனம் பெற்ற முஸ்லிம் ஆசிரியர்கள் தங்களின் வசதிகளுக்காக தாங்கள் விரும்பும் பாடசாலைகளுக்கு இடம் மாறியும் போய்விடுகின்றார்கள்.

எனவே, அவர்கள் தோட்டப் பாடசாலைகளுக்கும், தோட்டப்புற சிறார்களின் கல்விக்கும் எவ்விதத்திலும் துணைபுரியப் போவதில்லை. எனவே, தோட்டப்புற பாடசாலைகளுக்கு இவ்வாறு வெளியாரை நியமிக்கும் முறை நிறுத்தப்பட வேண்டும் என ஏற்கனவே நாடாளுமன்றத்தில் நாம் குரல் எழுப்பியுள்ளோம். இந்தக் கருத்தை ஆதரித்து சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களும் குரல் எழுப்பியிருக்கின்றனர். - என்றார் அவர். (எ-க)

# போராடிப் பெற்றதை வாதாடிக் கெடுக்காதே!

## மலையகத்தில் நேற்றுக் கோஷம்

பொகவந்தலாவை,ஜூலை23

போராடிப் பெற்றதை வாதாடிக் கெடுக்காதே என்ற கோஷம் நேற்று மலையகம் எங்கும் எதிரொலித்தது.

மலையக இந்திய வம்சாவழி மக்களுக்கு வழங்கப்படவிருக்கும் ஆசிரிய நியமனங்களுக்குத் தடைவிதிக்கும் நோக்கில் எடுக்கப்படும் நடவடிக்கைகளை ஆட்சேபித்து மலையகப் பாடசாலைகளில் நேற்று எதிர்ப்பு நிகழ்ச்சிகள் பரவலாக இடம்பெற்றன. அப்போதே இந்தக் கோஷம் அங்கு கிளப்பப்பட்டது.

அங்கு எழுப்பப்பட்ட - மனதைத் தொட்ட - ஏனைய கோஷங்கள் வருமாறு:-

* 'எமது இந்திய வம்சாவழித் தமிழ் மக்களுக்கென எத்தனையோ கஷ்டத்திற்கு மத்தியில் பெற்ற ஆசிரியர் நியமனத்தை பிறர்தடுக்க விடமாட்டோம்.'
* 'எத்தனையோ அரச நியமனங்கள் வழங்கிய போதெல்லாம் மனிதாபிமானத்துடன் ஆதரவு தந்தோமே, இதுதானா நீங்கள் செய்யும் கைம்மாறு?'
* 'துறைமுகத்திலா வேலை கேட்டோம் நாங்கள்? ஆசிரியர் நியனம்தானே கேட்டோம்! அதுவும் எங்கள் பிள்ளைகளுக்கு எங்கள் பாடசாலைகளிலே கற்பிக்க அல்லவா?'
* 'பொறுத்தது போதும். பொங்கியெழுவோம். அநியாயங்களை பார்த்து மௌனமா சாதிக்கச் சொல்கிறீர்கள்? பொறுமைக்கும் எல்லை உண்டு.'
* 'எமக்குரிய வாய்ப்பை இன்னொருவர் தட்டிப்பறிப்பதா? விடமாட்டோம். நிலைமையைத் தொடரவும் விடமாட்டோம்.'
* 'உணர்வுகளை மதித்திடுவோம். உரிமைகளை விட்டுக் கொடுக்கமாட்டோம்.'
* 'ஆசிரியர் நியமனத்தில் தடையா? பொங்கியெழும் படையணி, மாணவர் படையணி!'
* 'எங்களுக்காக குரல் கொடுத்தால், உங்களுக்காக உயிரையும் நாம் கொடுப்போம்.!'
* 'நேசத்தை வளர்ப்போம். நாசத்தை ஒழிப்போம்.'
* 'ஓரணி திரள்வோம். வாதத்தை வெல்வோம்.'
* 'போராடிப் பெற்றதை வாதாடியும் வெல்வோம்.' (எ-க)

# மின்சாரசபை மறுசீரமைப்பு ஒருவாறு முடிவுக்கு வந்தது

கொழும்பு,ஜூலை23

நாட்டில் பல்வேறு சர்ச்சைகளுக்கும், எதிர்ப்புகளுக்கும் உள்ளாக்கப் பட்டிருந்த இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்பு விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது.

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கவும், நிர்வாகத்தை நவீனமயப்படுத்தவும் அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. இதன்படி மின்சாரசபை நிர்வாகம் நான்கு இணை நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படும்.

இலங்கை மின்சாரசபைக்கு ஏற்பட்டிருந்த நட்டம் ஒன்பதாயிரம் கோடி ரூபா ரத்து செய்யப்பட்டுள்ளது. அதனைத் தேசியக் கடனாக அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம நேற்று செய்தியாளர்களிடம் இதனைக் கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். (எ-க)

# வலி.மேற்கிலும் கலை இலக்கியப் பெருவிழா

வலி.மேற்கு,ஜூலை23

வலிகாமம் மேற்கு, சங்கானை கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் அடுத்தமாதம் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் சங்கானை கலாசார மண்டபத்தில் கலை இலக்கியப் பெருவிழா நடத்தப்படவுள்ளது.

முதலாம் நாள் நிகழ்வுகள் அண்மையில் மறைந்த கலாபூஷணம் அ.முருகவேள் அரங்கிலும், இரண்டாம் நாள் நிகழ்வுகள் அமரர் கா.சந்திரராசா அரங்கிலும் இடம்பெறவுள்ளன.

முதலாம் நாள் பாரம்பரிய கலைநிகழ்ச்சிகளுடன் கூடிய ஊர்வலம் இடம்பெறும்.

கலை இலக்கியப் பெருவிழாவை சிறப்பாக நடத்துவதற்கான ஆரம்ப கட்ட ஏற்பாடுகளை வடக்கு - கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளரும், வலிகாமம் மேற்கு, சங்கானை பிரதேச செயலருமான சீ.ஏ.மோகன்றாஸ் செய்துவருகிறார். (3-175)

## கூடைப்பந்தாட்டம்: மைதானம் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம்,ஜூலை23

தமிழீழ மாணவர் அமைப்பு, தமிழீழ விளையாட்டுத்துறை ஆகியவற்றுடன் இணைந்து யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்றும் நாளையும் யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவிருந்த ஆட்டங்கள் தவிர்க்க முடியாத காரணங்களால் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (எ-190)

## கல்விசாரா ஊழியர் போராட்டம் தொடர்கிறது

சம்பள முரண்பாடுகளை நீக்குமாறுகோரி அனைத்துப் பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் மேற்கொண்டுவரும் வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று 25 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

யாழ்.பல்கலைக்கழகத்திலும் கல்விசாரா ஊழியர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர். இந்த வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக யாழ்.பல்கலைக்கழகத்தின் பல்வேறு செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், எனினும் கல்வி நடவடிக்கைகள் தடங்கல் இன்றித் தொடர்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தமது பிரச்சினைகள் தொடர்பாக உயர் கல்வி அமைச்சு உரிய நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லையெனவும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடன் மேற்கொண்ட பேச்சுகள் பலனளிக்கவில்லையெனவும் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்தது. இதன் காரணமாகவே தமது வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்வதாகவும் ஊழியர் சங்கம் மேலும் தெரிவித்தது. (8)

## பரிசளிப்புவிழா

இக்ர:. அஹதிய்யா சன்மார்க்க போதனா பீட வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

போதனா பீடத்தின் முதல்வர் அஷ் ஷெய்ஹ் எம்.எஸ்.ஏ.எம்.முபாறக் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் அல்ஹாஜ் எஸ்.ஏ.சி.எம். இனனூ (எம்.ஏ) முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இக்ர:. அஹதிய்யா சன்மார்க்க போதனா பீட சட்டத்தரணி எம்.எம்.எம். றமீஸ் (எல்.எல்.பி.) சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

மக்கள் பணிமனைத் தலைவர் மௌலவி நி.ஏ.எஸ்.சுப்யான் (யாகூத்தி) விசேட உரை நிகழ்த்துவார். (எ-204)

# தகைமைப் பரிசீலனைக்குச் செல்லும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு

திருகோணமலை,ஜூலை23

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கென அவர்களது தகைமைகளைப் பரிசீலிப்பதற்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் திருகோணமலையில் உள்ள மாகாணக் கல்வியமைச்சில் இடம்பெறவுள்ளது. இத்தகவலை மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்தார்.

எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கும் -

எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கும் -

கல்வித் தகைமைகளைப் பரிசீலிப்பதற்கான நேர்முகத் தேர்வு நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

மேற்குறிப்பிட்ட இரு தினங்களிலும் முற்பகல் 9.30 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை நேர்முகத் தேர்வு நடத்தப்படவுள்ளது.

இதில் தோற்றவுள்ளவர்கள், தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், ஜி.சீ.ஈ. உயர்தரம் மற்றும் சாதாரண தர பெறுபேற்றுச் சான்றிதழ்கள், 2001 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய வருடங்களில் சேவையாற்ற வலயக் கல்விப் பணிப்பாளரால் வழங்கப்பட்ட அனுமதிக்கடிதம், பிரதேச செயலர், சமாதான நீதிவான், முன்னர் கல்விகற்ற பாடசாலை அதிபர் ஆகியோரிடம் பெறப்பட்ட மூன்று நற்சான்றிதழ்கள் ஆகிய ஆவணங்களையும் அவற்றின் நிழற்படப் பிரதிகளையும் உடன் எடுத்து வரவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஒ)

# நூற்றைம்பது ஓட்டங்களுக்கு சுருண்டது இலங்கை அணி

கொழும்பு,ஜூலை23

மேற்கிந்திய அணியுடனான இரண்டாவது டெஸ்ட்டின் முதல் இன்னிங்ஸில் பவலின் வேகப்பந்து வீச்சில் 150 ஓட்டங்களுக்கு சுருண்டது இலங்கை அணி.

இலங்கை - மேற்கிந்திய அணிகளுக்கிடையிலான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் கண்டி, அஸ்கிரிய மைதானத்தில் நேற்று ஆரம்பித்தது. மேற்கிந்திய அணியில் ஸ்மித் நீக்கப்பட்டு ராம்தாஸ் என்ற இளம்வீரர் சேர்க்கப்பட்டிருந்தார்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் சந்தர்போல் இலங்கை அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு அழைத்தார்.

இதன்படி துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 150 ஓட்டங்களை மட்டுமே முதல் இன்னிங்ஸில் எடுத்தது. பின் தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிவின்போது 5 விக்கெட்டுக்களை இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.




தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவு கலாசார சபை நடத்திய வருடாந்த தேசிய கலை இலக்கியப் பெருவிழா அண்மையில் உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் அரங்கில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதேசத்தைச் சேர்ந்த 35 கலைஞர்கள் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். கௌரவிப்புப் பெற்ற கலைஞர்களுடன் உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன், பிரதம விருந்தினரான மேலதிக மாவட்ட செயலர் (நிதி) எஸ்.சண்முகராஜ்ணம், பிரதேச பண்பாட்டு அலுவலர் ஆகியோர் இணைந்து எடுத்துக்கொண்ட படங்கள் இவை.

# குவாண்டனாமோ சிறை முகாமில் ஆப்கான் கைதிகள் உண்ணாவிரதம்!

லண்டன், ஜூலை23

கியூபாவின் குவாண்டனாமோ சிறை முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஆப்கான் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமது விடுதலையைத் துரிதப்படுத்து மாறுகோரியே இவர்கள் கடந்த 3 நாள்களாக உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்று அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின்போது, கைதானவர்களே கியூபா நாட்டில் அமெரிக்க கட்டுப்பாட்டில் அமைந்துள்ள குவாண்டனாமோ சிறை முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அமெரிக்காவுக்கு எதிராக போரிட்டவர்கள் என்று அமெரிக்கா கூறி வருகிறது.

குவாண்டனாமோ சிறையில் தற்போது 600 இற்கும் மேற்பட்டவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் நால்வருக்கு எதிராக மட்டுமே குற்றச்சாட்டுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

குவாண்டனாமோ சிறையிலுள்ள கைதிகள் தமது விடுதலைக்காக மேற்கொண்டுள்ள தற்காலிக நடவடிக்கை இதுவாகும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 3 வருடங்களாக குவாண்டனாமோ சிறையிலிருந்து சமீபத்தில் விடுதலையான ஆப்கான் பிரஜை ஒருவர் தெரிவிக்கையில், நூற்றுக்கும் மேற்பட்ட கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று கூறினார்.

அந்தச் சிறைச்சாலையில் மனித உரிமை மீறல்கள் அதிகளவு இடம்பெறுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கைதிகளின் குடிதண்ணீர் தரம் மிகவும் குறைந்ததாக உள்ளது. எனவே, அவர்கள் பெரும் ஆத்திரம் கொண்டுள்ளனர் என்றும் -

தம்மைக் குறித்து விசாரணை செய்யுமாறு தமக்கு இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்துக் கவனத்தில் கொள்ளுமாறும் கோரியே கைதிகள் உண்ணாவிரதத் தில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ)

# பிரிட்டிஷ் பொலீஸாரின் தேடுதலில் ஆசியரொருவர் கொல்லப்பட்டார்!

லண்டன், ஜூலை23

பிரிட்டிஷ் தலைநகர் லண்டனில் தேடுதல் வேட்டை நடத்திவரும் பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி நபரொருவர் உயிரிழந்தார் என்று அந்நாட்டுப் பொலீஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

ஸ்டொக் வெல் சுரங்க ரயில் நிலையத்தில் வைத்து ஆசியரான அந்த நபர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று பொலீஸார் உறுதி செய்துள்ளனர்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் நேற்றுமுன் தினம் லண்டனில் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களுடன் தொடர்பு பட்டவரா என்பது குறித்து தகவல்கள் வெளியாகவில்லை.

இரண்டாவது தடவையாக நேற்றுமுன் தினம் லண்டனில் 3 சுரங்க ரயில் நிலையங்களிலும் பஸ்ஸிலும் குண்டு வெடிப்புகளை நடத்திய தற்கொலைக் குண்டுதாரிகளைத் தேடும் நடவடிக்கையில் அந்நாட்டுப் பொலீஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இதன்போதே மேற்படி நபர் கொல்லப்பட்டார்.

# அல்ஜீரிய ராஜதந்திரி பக்தாத்தில் கடத்தல்!

பக்தாத், ஜூலை23

அல்ஜீரிய நாட்டின் ஈராக்கிற்கான ராஜதந்திரியும் அவரது உதவியாளரும் ஈராக் தலைநகர் பக்தாத்தில் நேற்றுமுன்தினம் கடத்திச்செல்லப்பட்டுள்ளனர் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

பக்தாத்தின் தென்மாகாணமான மான்சோர் மாவட்டத்தில் ஒரு உணவு விடுதிக்கு வெளியில் வைத்து இருவரும் காரில் கடத்திச்செல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அலி பலாருக் என்ற இராஜதந்திரியே கடத்தப்பட்டவராவார்.

இம்மாத ஆரம்பத்தில் தீவிரவாதிகளினால் கடத்திச் செல்லப்பட்ட எகிப்தியத் தூதுவர் பின்னர் கொலைசெய்யப்பட்டார்.

சர்வதேச நாடுகளுடனான ஈராக்கின் உறவைத் தடுத்து நாட்டைத் தனிமைப்படுத்துவதற்காகவே தீவிரவாதிகள் இவ்வாறு செயற்படுகின்றனர் என்று அதிகாரியொருவர் கூறினார்.

இந்தக் கடத்தலுக்கு அல் ஜீரியா மற்றும் அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

(ஒ-க)



ஈராக்கிய இராணுவத்தினரும், அமெரிக்கப் படையினரும் இணைந்து அல்-சருக் (சூரிய உதயம்) என்ற பெயரில் கிளர்ச்சியாளரைத் தேடும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். இதன்போது சந்தேகத்தின்பேரில் கைதானவர்களிடம் சோதனை நடத்தப்படுவதைப் படத்தில் காணலாம்.

## சதாம் மீதான முதலாவது விசாரணை

பக்தாத், ஜூலை23

குர்திஷ் இன மக்களைக் கொன்று குவித்தது குறித்து ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹூசைனை அந்நாட்டு விசேட நீதிமன்றம் நேற்றுமுன்தினம் விசாரணை செய்தது.

தாடியுடன் முதுமைத் தோற்றத்தில் இருந்த சதாம் சோர்வடையாது உரத்தக் குரலில் எந்தப் பயமோ கவலையோ இன்றி பதிலளித்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சதாமுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் விரைவில் விசாரணைக்குட்படுத்தப்படும் என ஈராக் அரசு அறிவித்து சில தினங்களின் பின்னரே இந்த முதலாவது விசாரணை நடத்தப்பட்டது.

1982 ஆம் ஆண்டு வட பக்தாத்தின் கிராமமொன்றில் 140 குர்திஷ்களைக் கொன்று குவித்தது பற்றியே முதலாவது விசாரணை நடத்தப்பட்டது.

தனது செயலை நியாயப்படுத்தி ஆவேசத்துடன் பேசிய சதாம் தன்னை விசாரணை செய்த நீதிபதியை எதிர் கேள்விகேட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விசாரணையை அல் அரேபிய தொலைக்காட்சி நேரடியாக ஒலிபரப்பியது. விசாரணைக்கு அழைத்துவரப்பட்ட சதாம் அண்மையில் அமெரிக்காவினால் அமைக்கப்பட்ட அரசை வன்மையாகக் கண்டித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. சதாம் மீதான ஏனைய குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணை எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் நடத்தப்படும் என்று நம்பப்படுகிறது. (ஒ-க)

உலக அரங்கில்

# அமெரிக்காவுக்கான சவூதித் தூதர் ராஜினாமா

வாஷிங்ரன், ஜூலை23

அமெரிக்காவுக்கான சவூதி அரேபியத் தூதராக 22 ஆண்டுகளாகப் பணிபுரிந்து வந்த இளவரசர் பந்தர் பின் சுல்தான் அவரது பதவியை ராஜினாமா செய்துவிட்டார்.

அவர் சொந்தக் காரணங்களுக்காகப் பதவி விலகுகிறார் என சவூதி வெளியுறவுத்துறை கூறிள்ளது.

அமெரிக்காவில் உள்ள உலக வர்த்தக மையத்தை 2001 ஆம் ஆண்டில் தீவிரவாதிகள் தகர்த்தபோது சர்ச்சையில் இவர் சிக்கினார். இவரும் இவரது மனைவியும் அளித்த நிதியுதவி தீவிரவாதிகளுக்குப் போய்ச் சேர்ந்ததாகத் தகவல்கள் வெளியாகின. அதை இருவருமே கடுமையாக மறுத்தனர்.

அவரது ராஜினாமா வருத்தம் தருவதாக வெளியுறவு செய்தித் தொடர்பாளர் ஆதம் தெரிவித்தார். அமெரிக்காவில் சிறந்த நண்பனாகவும் ஆலோசகர்களாகவும் அவர் இருந்தார் எனவும் ஆதம் கூறினார். (க)


உங்கள் விமானப் பயணத்திற்கு!

Aero Lanka

In Domestic Operation

New way of flying

Head office
No.500, Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626

Jaffna office
No.86, PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600

Branch
No:14, New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979

Trinco Office
No.47, Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519

யாழ்⇆கொழும்பு | யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு


## NOTICE

**Ministry of Finance and Planning**
**Welfare Benefits Board**

**Notice published under Section 11 (1) of the Welfare Benefits Act No. 24 of 2002**
**Selection of beneficiaries to receive payments under Samurdhi programme - Jaffna District.**

The Welfare Benefits Board, on the information submitted by the applicants in the Jaffna District, has selected the eligible households to receive benefits under the Samurdhi programme in respect of the Divisional Secretariat Divisions shown in the schedule. The list of selected households are now available in the Jaffna Kachcheri (District Secretariat) as well as in the Divisional Secretariats shown in the schedule.

**Schedule**
**Divisional Secretariat Divisions**

1. Islands North (Kayts & Karainagar)
2. Valikamam West (Chankanai)
3. Valikamam South West (Sandilipay)
4. Valikamam North (Tellipalai)
5. Valikamam South (Uduvil)
6. Valikamam East (Kopay)
7. Vadamaradchi South West (Karaveddy)
8. Vadamaradchi North (Point Pedro)
9. Thenmaradchi (Chavakachcheri)
10. Nallur
11. Jaffna
12. Island South (Velanai)
13. Delft

Any objections to the households included in the list or any appeal for reconsideration should be submitted to Divisional Secretary.

**S M Tennakoon**
**Chairman/Commissioner**
**Welfare Benefits Board,**
**34, Malay Street,**
**Colombo - 02.**

## அறிவித்தல்

**நிதி திட்டமிடல் அமைச்சு**
**நலன்புரி நன்மைகள் சபை**

*2002 ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் பிரிவு II (I) இன் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*
*சமுர்த்தித் திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெறக்கூடிய குடியிருப்பாளர்களைத் தெரிவுசெய்தல் - யாழ். மாவட்டம்*

நிதி, திட்டமிடல் அமைச்சின் கீழ் இயங்கும் நலன்புரி நன்மைகள் சபை, யாழ். மாவட்டத்திலுள்ள விண்ணப்பதாரர்களினால் வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களிலுள்ள விவரங்களிலிருந்து கீழே தரப்பட்டுள்ள அட்டவணையிலுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் சமுர்த்தித் திட்டத்தின்கீழ் நன்மைகளைப் பெறத் தகுதியான குடியிருப்பாளர்களைத் தெரிவுசெய்துள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட குடியிருப்பாளர்களைக் கொண்ட நிரல்கள் யாழ். மாவட்டக் கச்சேரியிலும் (மாவட்டச் செயலகம்) கீழே தரப்பட்டுள்ள பிரதேச செயலாளர் அலுவலங்களிலும் (பிரதேச செயலகம்) பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

அட்டவணை

**பிரதேச செயலாளர் பிரிவு**

01. தீவுப்பகுதி வடக்கு (ஊர்காவற்றுறையும் காரைநகரும்)
02. வலிகாமம் மேற்கு (சங்கானை)
03. வலிகாமம் தென்.மேற்கு சண்டிலிப்பாய்)
04. வலிகாமம் வடக்கு (தெல்லிப்பழை)
05. வலிகாமம் தெற்கு (உடுவில்)
06. வலிகாமம் கிழக்கு (கோப்பாய்)
07. வடராட்சி தென்மேற்கு (கரவெட்டி)
08. வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை)
09. தென்மராட்சி (சாவகச்சேரி)
10. நல்லூர்
11. யாழ்ப்பாணம்
12. தீவுப்பகுதி தெற்கு (வேலணை)
13. நெடுந்தீவு

தகுதியற்ற குடியிருப்பாளர்கள் இந்நிரலில் உள்ளடக்கப்பட்டிருந்தால் அதற்கான ஆட்சேபனையையும் உள்ளடக்கப்பட்டிருக்கவேண்டும் எனக் கருதும் குடியிருப்பாளர் மீள்பரிசீலனைக்காகச் செய்யவேண்டிய மேன்முறையீட்டையும் பிரதேச செயலாளரிடம் கையளிக்கவேண்டும்.

எஸ்.எம்.தென்னக்கூன்,
தலைவர் / ஆணையாளர்,
நலன்புரி நன்மைகள் சபை,
34, மலே வீதி,
கொழும்பு - 02.
20.07.2005

(சி/44312) (24-18-33-16)

# வைத்தியசாலைக்கு உபகரணம்

தென்மராட்சி,ஜூலை23

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு இரத்தத்தில் சீனி அளவினைக் கணிப்பிடும் கருவிகள் (குளுக்கோ மீற்றர் கருவி) நான்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான இக்கருவிகளைக் கொடிகாமம் கோயிலாமனையைச் சேர்ந்த திருமதி எஸ்.சுதர்சினி, டாக்டர் ச.அம்பிகைபாகனிடம் அண்மையில் கையளித்தார்.

யுத்தத்தினால் அழிவடைந்து அனைத்து மருத்துவச் சொத்துக்களையும் இழந்த இவ் வைத்தியசாலையின் சேவையினை மீண்டும் கட்டியெழுப்ப பொதுமக்கள் தாமாகவே முன்வந்து வழங்கும் உதவிகளுக்கு மனமுவந்து நன்றிகளைத் தெரிவிப்பதாக டாக்டர் ச.அம்பிகைபாகன் கூறினார்.

(3-117)

# கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் வாழ்வை மேம்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை23

யாழ். பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் கணவனால் கைவிடப்பட்டு அநாதரவாகியுள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

யாழ். நகர் கிழக்கு சமுர்த்தி வங்கியின் சமுர்த்தி மகளிர் உதவித் திட்டத்தின் கீழ் இந்த விவரம் திரட்டப்பட்டு வருவதாக வங்கியின் முகாமையாளர் ம.கியூமன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். நகர் கிழக்குப்பகுதியில் கணவனால் கைவிடப்பட்ட பெண்ணின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. இதனடிப்படையில் அவர்களுடைய இன்றைய தேவைகள் என்ன என்பதை அறிந்து சுயதொழில் வாய்ப்புகள் ஊக்குவிக்கப்படவுள்ளன.

இதில் முதற்கட்டமாக மேற்படி பெண்களின் விவரங்கள்அந்தந்தப்பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தர்களால் திரட்டப்பட்டு வருகின்றன - என்றார் அவர்.

(ஒ-13)


## மருதம் வாணிபம் நடத்தும் ஏலவிற்பனை

2005-07-24

எமது களஞ்சிய இருப்புக்களைத் துரிதமாக வெளியேற்றுவதற்கு 2005-07-24 ஆம் நாள் முற்பகல் 10 மணிக்கு கிளி/ மத்திய கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள வளாகத்தில் ஏலவிற்பனை நடைபெறும்.

* பொருள் விரிப்பு

- இலத்திரனியல் பொருள்கள்
- மின்னியற் பொருள்கள்
- புடைவை வகைகள்
- ஊர்தி உதிரிப்பாகங்கள்
- அழகுசாதனப் பொருள்கள்
- இன்னும் பல்வகைப் பொருள்கள்

இன்று பொருள்களை ஏலவிற்பனை நடைபெறும் கட்டடத்தில் பார்வையிடமுடியும்.

* கவனிப்புக்கு:-

- ஏல விற்பனையில் பங்குகொள்வோர் உருபா ஐம்பது (50.00) செலுத்தி நுழைவு அனுமதி பெறுதல் வேண்டும்.
- ஏலத்தில் பொருள் பெறுபவர் முழுப்பெறுமதியினையும் செலுத்தி உடன் பொருள்களை அகற்றுதல் வேண்டும்.
- முழுப்பெறுமதியினையும் உடன் செலுத்த முடியாதோர் 50% இற்குக் குறையாத தொகையைச் செலுத்தி மூன்று (03) நாள்களுக்குள் மீதித்தொகையைச் செலுத்திப் பொருள்களை அகற்றுதல் வேண்டும்.
- ஏலத்தில் பங்குகொள்வோர் தமக்கிடையில் மறைமுக இலாபம்கருதி பேரம் பேசுதல், உடன்படிக்கை செய்தல் பங்குகொள்வோரைத் தகைமை இழக்கச் செய்யும்.

(சி/44309) (24-14-15)



## குடத்தனைப் பிரதேச மக்களுக்கான வடமராட்சி லயன்ஸ் கழகத்தினரின் இலவச மருத்துவசேவை

We Serve

இடம்: குடத்தனை தென்னிந்தியத் திருச்சபை
காலம்: 24-07-2005 ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 9.30 - பிற்பகல் 2.30 மணிவரை

- கண் பரிசோதித்து மூக்குக் கண்ணாடி வழங்குதல் கண் பரிசோதனை நிபுணர் எஸ்.எம்.பெர்னாண்டோ அவர்கள்
- பொது மருத்துவம் - மாவட்ட வைத்திய அதிகாரி லயன் டாக்டர் எஸ்.கதிரைவேற்பிள்ளை அவர்களுடன் இணைந்து யாழ். போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய கலாநிதிகள் சேவை வழங்குவர்.
- பற்சிகிச்சை - பல்வைத்திய நிபுணர் V.ஜெயராசா அவர்களால் வழங்கப்படும்.

**நெருக்கடியினைத் தவிர்க்குமுகமாக உரிய நேரத்தில் சமுகமளித்துப் பயன்பெறுமாறு வேண்டுகின்றோம்.**

**வடமராட்சி லயன்ஸ் கழக சார்பில்**

வி.சிவகுமார்
தலைவர்.

அ.துரைசிங்கம்
செயலாளர்.

(சி/44305) (24-14-15)



*உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு*
*வடக்கு - கிழக்கு மாகாண சபை*

**வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி விஸ்தரிப்புத் திட்டம்**
(நீகோட் - விஸ்தரிப்பு)
நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி ஆஅவ கடன் இல.:- 2084 - சிறீ (எஸ்எவ்)

**கேள்வி அறிவித்தல் - இல.: 43 குடிசார் வேலைகளைப் பெறுதல்**

1. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி விஸ்தரிப்புத் திட்டம்; (NECORD Ext) ஆகு செலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ.") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின்கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னால் தொழில்தருநராகக் குறிப்பிடப்படும் NECORD திட்டக் கேள்விச் சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்குத் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

*அட்டவணை*

| தொ. இல. | ஒப்பந்த இனங் காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | TC/NECORD-Ext/ IR/01 | கிளிநொச்சி மாவட்டத்தின் பொன்நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தினை மீளமைத்தல் (Stage - II) | M 3 கட்டடங்கள் | 810,850/- |
| 02. | VA/NECORD-Ext/IR/01 | கிளிநொச்சி மாவட்டத்தின் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் நிர்வாக மற்றும் மாணவர் செயற்பாட்டு அலகுகள் நிர்மாணம் | M 5 கட்டடங்கள் | 191,600/- |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள்.
   - I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரராகப் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   - II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக (ICTADடுடன் M7இற்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) விளங்கவேண்டும்.
   - III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.
   - IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.
   - V. ஒப்பந்தகாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.
   - VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.
4. ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களைத் *திட்டப் பணிப்பாளர், நீகோட் திட்டம், 55, கந்தசுவாமி கோயில் வீதி, திருகோணமலையில்* பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 026 222 7434. பக்ஸ்: 026 222 7401. இணையத்தள முகவரி:. www.necord .org ஈமெயில்: necord @.slt net. lk)
6. கேள்வி ஆவணங்களை 25.07.2005இலிருந்து 08.08.2005 வரை காலை 9.30 மணியிலிருந்து மாலை 3 மணிவரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 5000/- ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும் கேள்விகோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.
8. பொறிவைத்த கேள்விகள் யாவும் *தலைவர், திட்ட கேள்விச்சபை, 'நீகோட்' 55, கந்தசுவாமி கோயில் வீதி, திருகோணமலை* என்ற விலாசமிடப்பட்டு 15.08.2005 முற்பகல் 11.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்க வேண்டும். இதன் பின்னர் உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியும்.
9. முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று *நீகோட் திட்டக் காரியாலயம், 55, கந்தசுவாமி கோயில் வீதி, திருகோணமலையில்* 08.08.2005ஆம் திகதி அன்று முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்குக் கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்குத் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

த.லங்காநேசன்,
தலைவர், கேள்விச் சபை, நீகோட் திட்டம், 55, கந்தசுவாமி கோயில் வீதி, திருகோணமலை.

(சி/43303)(24-14-15)


## கண்ணீர் அஞ்சலி



### அமரர் கந்தையா கணேசலிங்கம்

(E.S.P. & Co. கொழும்பு - முகாமையாளர்)

ஆண்டுகள் பல எம்மோடு உறவாடி
ஊர்பெயரை உன்னோடு சேர்த்துக்கொண்டாயே!
உன்னை நாடி வந்தோர் யாவரையும்
அன்புடனும் பண்புடனும் வரவேற்று
உதவிகள் பற்பல செய்தாயே!
தேடிவந்தோர் யாவரையும் நீ சினக்கவில்லை
கொழும்பு மாநகரில் மிடுக்குடன் கடமைபுரிந்தாயே!
உன் துணிச்சல் மிக்க மன உறுதியை
நாம் கண்டு மெய்சிலிர்த்தோம் - கணேசா!
நண்பனாய் நல்ல சகோதரனாய்
தோள்கொடுத்து செய்த உதவிகளை என்றும் மறப்போமா?

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

கஜமுகன் மோட்டர்ஸ்
இ.ச. பேரம்பலம் சக
நிறுவனத்தின் எஸ்.பி.என். மோட்டர்ஸ்
உரிமையாளரும், சேவையாளர்களும்.


*50,கஸ்தூரியார் வீதி.*

(38060) (24-14-15)

## மரண அறிவித்தல்

### இரத்தினம் சண்முகநாதன்

*(சின்னராசா)*



சாவகச்சேரி, சங்கத்தானையைச் சேர்ந்த இரத்தினம் சண்முகநாதன் (சின்னராசா) அவர்கள் 21.07.2005 வியாழக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் இரத்தினா (சூரியா) அவர்களின் அன்புக் கணவரும் சந்திரமோகன் (கண்ணன் - லண்டன்) அவர்களின் அருமைத் தந்தையும் குகாநந்தினியின் அன்பு மாமனாரும் ஆகாஸ், கேசனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராமலிங்கம் வீதி,*
*கண்டி வீதி,*
*சாவகச்சேரி.*

தகவல்:
திருமதி இரத்தினா (சூரியா),
சந்திரமோகன் (மகன் - கண்ணன்).

(38062) (39-14-15-24)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# இரண்டு தசாப்தங்கள் தாண்டியும் இன்னும் நீடிக்கும் ஆடிக்கலவர அதிர்வு

இலங்கையின் எதிர்காலத்தையே மாற்றியமைத்த - முழு நாட்டையுமே அதிரவைத்த - ஆடிக்கலவரம் வெடிப்பதற்கான முதல் தீப்பொறி பறந்து இன்றுடன் 22 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

1983ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் திகதி முன்னிரவு யாழ்ப்பாணம், திருநெல்வேலி, தபால்கட்டுச் சந்தியில் தலைவர் பிரபாகரன் தலைமையிலான புலிகளின் குழுவினர் நடத்திய கண்ணிவெடித்தாக்குதலின் அதிர்வு இன்றும் பேரதிர்வாய் முழு நாட்டையுமே உலுப்பிக்கொண்டிருக்கின்றது.

பௌத்த, சிங்கள மேலாண்மைவாதப் போக்கின் அடக்குமுறையிலிருந்து மீள்வதற்கும், தமக்கு நீதியாகக் கிடைக்கவேண்டிய உரிமைகளைப் பெறுவதற்கும், தமது நியாயமான அபிலாஷைகளை அடைவதற்கும் சுதந்திர இலங்கையில் சுமார் இரண்டரை தசாப்தகாலம் தாங்கள் அகிம்சை வழியில் - சாத்வீக நெறியில் - காந்தீயத் தடத்தில் - மேற்கொண்ட அரசியல் போராட்டங்கள் பேரினவாதத்தால் அதிகார, ஆயுத பலங்கொண்டு அடக்கப்பட்ட சூழ்நிலையில் -

ஆயுத வழியில் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவிற்குத் தாம் வந்துவிட்டதைத் தமிழினம் உலகிற்குப் பறைசாற்றும் நிகழ்வாக - கட்டியம்கூறும் சம்பவமாக - அமைந்தது அந்தக் கண்ணிவெடித் தாக்குதல்.

அடக்குமுறை ஆட்சிப்போக்கிற்கு அதே வழியில் பதில்தர - 'முள்ளை முள்ளால் எடுக்க' - தமிழினம் தயாராகிவிட்டது என்பதை உணர்த்தும் நிகழ்வாகவும் அது அரங்கேறியது.

ஈழத்தமிழரின் விடுதலைக்கான போராட்டத்தில் புதிய பரிமாணமும் பரிணாமமும் நிகழ்ந்துவிட்டதை உலகிற்கு இயம்பும் பிரகடனமாகவும் அது அமைந்தது.

ஆனால், அந்தோ பாவம்!, தனது இயல்பான அடக்குமுறைப் போக்கோடும் தனக்கே உரிய திமிர்மிடுக்கோடும் இந்த அறிவிப்பைக் தூசாக எடுத்துக்கொண்டது பேரினவாதம்.

அதனால், இரண்டு தசாப்தகாலமாகப் பேரழிவுப் படிப்பினையை அது தொடர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

மூன்று தசாப்தகாலம் அகிம்சை வழியில் போராடிய தமிழர்கள், அது பயன்தராத நிலையில் எழுச்சிகொண்டபோது - அந்த எழுச்சியையும் புரட்சியையும் - பெருத்த எடுப்பில் இனவாதக் கொடூரத்தைத் தமிழர்மீது கட்டவிழ்த்துவிட்டு, தமிழினத்தையே சூறையாடி, அவர்களைக் கொன்றொழித்து, அட்டகாசம் புரிந்து, மிரட்டி, அடக்கிப் பணியவைத்துவிடலாம் எனக் கனவு கண்டது பேரினவாதம்.

அந்தப் பகற்கனவோடு அடுத்துவந்த நாள்களில் வெடித்ததே ஆடிக்கலவரம் எனும் கொடூரம். ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் வெட்டியும், சுட்டும், உயிரோடு எரித்தும் படுகொலை செய்யப்பட்டனர். நாலாயிரத்துக்கும் மேற்பட்டோர் சிங்களக் காடையர்களால் படுகாயப்படுத்தப்பட்டனர். பல லட்சம் தமிழர்கள் வீடு, வாசல்கள், உடைமைகளை இழந்து நிர்க்கதியாகினர். சுமார் அறுநூறு தமிழ்ப்பெண்கள் ஏதோ வகையில் மானபங்கத்துக்கு உள்ளாக்கப்பட்டனர். 4 ஆயிரம் வர்த்தக நிலையங்கள் சூறையாடப்பட்டன. தவிரவும் கோயில்கள், வீடுகள், கட்டடங்கள், பாடசாலைகள், வாகனங்கள் என்று தமிழரின் உடைமைகள் கொள்ளையிடப்பட்டும், எரித்தும் நாசமாக்கப்பட்டன. பல்லாயிரக்கணக்கான கோடி ரூபா பெறுமதியான உடைமைகள், சொத்துகள் போன்றவற்றைச் சில மணிநேரத்தில் தமிழினம் இழந்தது.

இது தவிர, இலங்கை அரசின் நீதி அமைச்சின் காவலில் - தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் - வைக்கப்பட்டிருந்த 52 தமிழ்ப் போராளிகள் அடித்தும், உதைத்தும், கண்கள் பிடுங்கப்பட்டும், குடல்கள் உருவி எடுக்கப்பட்டும், மிலேச்சத்தனமாக - மிகக் கொடூரமாக - கொலைசெய்யப்பட்டனர்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான அரசினால் 1972இல் கொண்டுவரப்பட்ட புதிய அரசமைப்புமூலம் உச்சம்பெறத் தொடங்கிய இத்தகைய பேரினவாத அடக்குமுறை, அடுத்துப்பதவியேற்ற ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆட்சியில் 1977 ஆவணிஅமளி, 1978 அரசமைப்பு ஆதிக்கம், 1981 யாழ். பொது நூலக எரிப்புடன் அமைந்த பண்பாட்டுப் படுகொலை, 1983 ஆடிக்கலவரம் என எல்லைமீறி வெளிப்பட்டது. அப்போது தென்னிலங்கைப் பேரினவாத அரசுத் தலைவர் தெரிந்தோ தெரியாமலோ முழங்கிய முழக்கம்தான் இன்றுவரை இலங்கை அரசியலின் அடிநாதமாக நின்று நிலைத்து நீடித்துவருகின்றது.

அன்று - தமது விடுதலைக்கான போராட்டத்தை ஓரிரு 'டசின்' உறுப்பினர்களோடு தமிழ்ப் போராளிகள் ஆரம்பித்தபோது - அதற்கு எதிரான அடக்குமுறை என்ற பெயரில் சிங்களப் பேரினவாதம் முழுத் தமிழினத்தின் மீதுமே இனக்கலவரத்தைக் கட்டவிழ்த்துவிட்டபோது - தமிழ் இனத்தைப் பார்த்து 'போரென்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்' - என அறிவித்தார் நாட்டின் தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா.

அந்த மமதைப் பேச்சும் அதையொட்டிய கொடூர இனக் கலவரமும் அந்தச் சிறிய கரந்தடிப் படையென்ற விதைக்குப் போடப்பட்ட உரமும் வார்க்கப்பட்ட நீரும் ஆகும்.

அந்த விதை வீறுகொண்டெழுந்து பெரும் மரபுவழி இராணுவமாக - ஒரு தேசிய இனத்தின் பாதுகாப்பு அரணாக - விஸ்வரூபம் எடுப்பதற்கு ஆக்கசக்தியாக - ஊக்கியாக - அமைந்தது இவை இரண்டுந்தான். விடுதலைத் தீக்குத் தம்மை அறியாமலேயே எண்ணெய் வார்த்தார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா.

அதன் விளைவு, அவர் கூறிய அதே வார்த்தைகளை அவரது சந்ததியினரைப் பார்த்து தமிழினம் இன்று கூறும் நிலைமைக்கு வந்துள்ளது. 'போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்' - இதுதான் அன்று ஜே.ஆர்.கூறியதும் இன்று தமிழினம் பதிலுக்குக் கூறி நிற்பதுமாகும்.

இலங்கை அரசியலை இன்றும் அதிரவைத்துநிற்கும் வாசகம் இதுதான்.

பேரினவாதத்தின் உச்சக்கட்டமாக வெளிப்பட்ட ஆடிக்கலவரத்தின் கொடூரத்தையும், அதன் விளைவாய் இன்றுவரை நாடு எதிர்கொண்டுவரும் பேரழிவுகள், போரழிவுகள் என்பனவற்றையும் பட்டறிவாக அனுபவித்தபின்னரும்கூட, இந்தப் பேரினவாதப் பிடியிலிருந்து விடுபட்டு, நியாயமான முறையில் இணக்கத்திற்குத் தீர்வுகாண்பதற்கு இடமளிக்காமல் அந்தப் பேரினவாதப் பேயைத் தென்னிலங்கை இறுகக் கட்டிப்பிடித்துக்கொண்டு இருப்பதுதான் இலங்கைத் தீவிற்குள்ள ஒரே சாபக்கேடு ஆகும்.

# தென்னை மரங்களுக்கு மருந்து விசிறும் போலி நபர்கள் குறித்து எச்சரிக்கை!

யாழ்ப்பாணம்,ஜூலை23

தென்னை மரங்களுக்கு மருந்து விசிறும் நடவடிக்கையில் தென்னை அபிவிருத்தி நிலைய அலுவலர்கள் எவரும் நேரடியாக ஈடுபடுவதில்லை ஆகவே, போலி நபர்கள் குறித்துப் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

இவ்வாறு கூறியுள்ளார் யாழ்.மாவட்ட தென்னை வள அபிவிருத்தி நிலைய உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரன்.

தென்னை அபிவிருத்தி நிலையத்திலிருந்து வருபவர்கள் என்று கூறிக்கொள்ளும் சிலர் தென்னைகளுக்கு மருந்து விசிறுவதாக நடித்துப் பொதுமக்களிடம் பணம்அறவிடுகின்றனர்என்று கூறப்படுகிறது.

இது தொடர்பாகக் கேட்டபோதே ஜெ.சத்தியேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தென்னைகளில் ஏற்படுகின்ற நோய்களுக்கு தென்னை அபிவிருத்தி நிலையத்தினர் நேரடியாக மருந்து விசிறும் நடவடிக்கையில் ஈடுபடுவதில்லை.

நோய்களைத் தடுப்பதற்குரிய ஆலோசனைகளையே வழங்குகின்றனர். அத்துடன், மருந்து விசிறுகின்ற வழிவகைகள் குறித்துப் பொதுமக்களுக்குப் பயிற்சியும் வழங்கப்படுகின்றது.

ஆனால், தென்னை அபிவிருத்தி நிலையத்தில் இருந்து வருகின்றோம் எனக் கூறிக்கொள்ளும் சிலர் வியாபார நோக்கோடு செயற்படுகின்றனர் என்று எமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இத்தகையவர்களின் செயலால் தென்னைகளில் பாதிப்பேற்படும் அபாயம் உள்ளது. ஆகவே, பொதுமக்கள் இது குறித்து விழிப்பாக இருக்கவேண்டும் - என்றார் அவர். (ஒ-ரி)

# படையினர் வெளியேறிய வீடுகளைப் புனரமைக்க உதவி

## உலக வங்கித் திட்டத்தின் கீழ்

வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் வெளியேறிய பகுதிகளில் உள்ள பாதிப்படைந்த வீடுகளைப் புனரமைக்க உலக வங்கி நிதியுதவி வழங்கவுள்ளது.

2002ஆம் ஆண்டு பெப்ரவரி 22ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த பின்னர் பாதுகாப்புப் படையினரால் விடுவிக்கப்பட்ட பகுதிகளிலே இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக 7 பிரதேச செயலர் பிரவுகளில் 300 வீடுகள் புனரமைக்க நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், உடுவில், கோப்பாய், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலேயே பாதிக்கப்பட்ட வீடுகள் புனரமைப்பதற்கு உதவி வழங்கப்படும்.

தெரிவுசெய்யப்படும் ஒரு வீட்டிற்கு இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்படும். மேற்குறிப்பிட்ட பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள பாதிக்கப்பட்ட வீடுகள் தொடர்பான பூரண விவரங்களை யாழ். மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு அரசஅதிபர் கே. கணேஸ் பிரதேச செயலாளர்களைக் கேட்டுள்ளார். (3-204-203)

## புதிய கட்டடம் அமைக்கத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை23

மாதகல் உப அலுவலகத்திற்கு இரண்டு மாடி புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான எண்ணக்கருப் படிவத்தை வலி.தென்மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் மே.சாந்தசீலன் யாழ். அரச அதிபர் கே.கணேஷிடம் வழங்கினார். (3-185)

# மருதங்கேணியில் வாரம் இரு தினங்கள் பற்சிகிச்சை

குருநகர்,ஜூலை23

மருதங்கேணி கிராமிய வைத்திய சாலையில் பிரதி புதன், வெள்ளிக்கிழமைகளில் பற்சிகிச்சை நடைபெற்றுவருகிறது. பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் கடமை[illegible]ம் பற்சிகிச்சை நிபுணர் டாக்டர் [illegible]ஞ்சன்குமார் இவ்விரு தினங்களிலும் அங்கு சேவையாற்றுகிறார் என யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஒ-51)

## கிழக்கில் பணியாற்ற வேண்டியிருப்பதால்

# நிரந்தர நியமனத்தை ஏற்க யாழ். பட்டதாரிகள் தயக்கம்

யாழ்ப்பாணம்,ஜூலை23

புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்க அமைச்சினால் வழங்கப்பட்ட நிரந்தர நியமனத்தை ஏற்பதற்கு யாழ்.மாவட்ட பட்டதாரிகள் பலரும் தயங்குகின்றனர் என்று கூறப்படுகிறது. இவர்களுக்கு மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நியமனம் வழங்கப்பட்டதே இதற்குக் காரணம் என்று கருதப்படுகிறது.

கடந்த முதலாம் திகதியிலிருந்து செயற்படும்படியாக தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரிகளுக்கு அபிவிருத்தி உதவியாளர்களாக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பட்டதாரிகள் பலரும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள அலுவலகங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நியமனக் கடிதம் பெற்ற பட்டதாரிகள் தற்போது கிழக்கு மாகாணத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக அப்பிரதேசத்தில் கடமையாற்ற அஞ்சுகின்றனர் என்று கூறப்படுகிறது.

அவர்கள் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜெயசிங்காவிடம் யாழ்.அல்லது வன்னி மாவட்டங்களில் தமக்கு நியமனம் வழங்கி உதவுமாறு கோரி கடிதங்களை சமர்ப்பித்துள்ளனர்.

இதேவேளை,

நியமனம் வழங்கப்பட்ட திகதியில் இருந்து 14 நாள்களுக்குள் குறித்த நிலையத்தில் அபிவிருத்தி உதவியாளர்கள் பொறுப்பேற்காவிடில் வேறு பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜெயசிங்க நடவடிக்கை எடுத்துவருகிறார் என்று கூறப்படுகிறது. (ஒ-185)

# மின்சாரச் சுடுகாடு அமைப்பது குறித்து செயலகத்தில் திங்களன்று கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை23

சடலங்களை மின்சாரத்தினால் தகனஞ்செய்யும் இரண்டு சுடுகாடுகள் யாழ். மாவட்டத்தில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இத்தகவலை உள்ளூராட்சிஉதவிஆணையாளர் க.இராசையா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

தென்னிலங்கையில் மின்சார சுடுகாடுகள் பாவனையில் உள்ளன. அவற்றைப் போன்று யாழ். மாவட்டத்திலும் மயானங்களை அமைக்க ஐ.நா. அபிவிருத்தித்திட்ட நிறுவனம் முன்வந்துள்ளது.

இந்த இரண்டு மயானங்களையும் எந்தெந்த இடங்களில் அமைப்பது என்று இதுவரை முடிவுசெய்யப்படவில்லை.

இதனைத் தீர்மானிப்பது மற்றும் மயானம் அமைக்கும் பணியை ஆரம்பிப்பது ஆகியவை தொடர்பான கூட்டம் யாழ். செயலகத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெறவுள்ளது.

அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-13)

# 10ஆம், 11ஆம் தர மாணவருக்கு ஊடகக் கல்வி தெரிவுப்பாடம்

அச்சுவேலி,ஜூலை23

ஊடகக் கல்விப் பாடம் 10ஆம், 11ஆம் தர மாணவர்களுக்கான தெரிவுப் பாடங்களுள் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சைக்கு மாணவர்கள் எட்டுப் பிரதான பாடங்களும் இரண்டு தெரிவுப் பாடங்களுமாக மொத்தம் 10 பாடங்களுக்குத் தோற்றவேண்டும்.

தற்பொழுது தெரிவுப்பாடங்களாக இருக்கும் தமிழ் இலக்கியம், புவியியல், சுகாதாரமும் உடற்கல்வியும், அபிவிருத்திக் கல்வி ஆகியவற்றுடன் ஊடகக் கல்வியும் இணைக்கப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டில் 10ஆம் தரத்தில் ஊடகக் கல்வியைத் தெரிவுப்பாடமாகக் கொள்ளும் மாணவர்கள் 2007ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் ஊடகக் கல்விப் பாடத்திற்குத் தோற்ற முடியும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ஒ-11)

## உதயவாக்கு

வளமுடன் வாழும்போது நண்பர்கள் உன்னை அறிவர்; வறுமையில் நீ நண்பர்களை அறிவாய்.

- ரஸ்கின்.

## நாளை

ஆடி 08
ஞாயிற்றுக்கிழமை
24.07.2005
திதி: திருதியை
பிற்பகல் 10.23 வரை
நட்சத்திரம் : சதயம்
சங்கடஹர சதுர்த்தி
முன் இரவு : 09.55 வரை
சுபநேரம்: 09.02 - 10.32
ராகுகாலம்: 04.32 - 06.02
(யாவும் பழைய நேரப்படி)




# அன்று இட்ட தீயினால் இன்றும் எரிகிறது தேசம்!

ஈழத்தமிழர்களது வாழ்க்கை நெறிமுறைகளில் ஆண்டின் சகல மாதங்களிலும் கலாசார மற்றும் ஆன்மீக நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளன. இதேவேளை, ஈழத்தமிழர்களது வாழ்வியலில் ஜூலை மாதம் முக்கியத்துவம் வகிக்கிறது. அதுமட்டுமன்றி இந்த நாட்டின் அரசியல் வரலாற்றிலும் இந்த மாதம் தனியிடம் பெற்றுள்ளது. இலங்கை அரசியல் வரலாற்றில் - தமிழர்கள் வாழ்வில் சோகமளிக்கும் - துக்கமான சம்பவங்களும், வீரதீரம் மிக்க வெற்றிகளும் ஜூலை மாதத்திலேயே நடந்தேறியுள்ளன.

இந்த வகையில் 1983 ஆம் ஆண்டின் ஜூலை மாதம் ஈழத்தமிழர் வாழ்க்கையில் பெரும் திருப்பமொன்றை ஏற்படுத்திய மாதமாக அமைந்துவிட்டது. போராட்ட வரலாற்றின் ஓட்டத்துக்கு ஒரு உத்வேகத்தை உருவாக்கிய சம்பவங்கள் 1983ஆம் ஆண்டின் ஜூலை மாதத்திலேயே இடம்பெற்றுள்ளன.

பேரினவாதத்தின் கோர முகம்

சாத்வீக வழியிலான தமிழரின் விடுதலைப் போராட்டம் இந்நாட்டின்


குட்டிமணி

தமிழ் மக்களது அடிப்படை உரிமைகளை பெற்றுத் தரப்போவதில்லை என்ற உண்மை உணரப்பட்ட நிலையில் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள இளைய சமுதாயத்தினர் ஆயுதமேந்திய விடுதலை அமைப்பாக ஒன்று திரண்ட காலகட்டம் அது.

தமிழ் இளைஞர்கள் மத்தியில் இவ்வித தீவிரமான எண்ணம்கொண்ட இளைஞர்கள் ஒன்று திரண்டு அரசுக்கு எதிராக ஆயுதமேந்திப் போராட முன்வந்தமையை அன்றைய அரசு மிக உன்னிப்பாக அவதானித்து வந்தது. அப்போதைய அரசுத் தலைவரான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா எவ்வாறாயினும் தமிழ்மக்கள் மத்தியில் முளைவிட்டு வளர்ந்த சுதந்திர உணர்வினை முளையிலேயே கிள்ளிவிட வேண்டுமெனத் திட்டம் தீட்டினார். அவருக்கு உதவியாகச் சிங்களக் கடும் கோட்பாட்டாளர்களான சிறில் மத்தியூ, காமினி திஸநாயக்க போன்றோரும் அரசில் அங்கம் வகித்து வந்தனர்.

இத்தகைய பேரினவாதச் சிங்களக் கடுங்கோட்பாட்டாளர் கூட்டம், தமிழ் இளைஞர்கள் மத்தியில் உருவாகி மெல்ல மெல்ல வளர்ந்து பலம்பெற்றுவரும் சுதந்திர தாகத்தின் குரல் வளையை அதிகார பலம் கொண்டு அடக்கிவிடுவதற்கான தக்க தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தது. தென்ஆசிய வட்டகை நாடுகளின் அரசியலில் செயற்பட்ட குள்ளத்தனமும் திட்டம் தீட்டிக் காய் நகர்த்தும் திறமையும் மிக்க அரசியல்வாதியாக ஜே.ஆர்.விமர்சிக்கப்பட்டவர். அரசியல் விமர்சகர்களால் 'குள்ளநரி', 'கிழட்டுநரி' என்றெல்லாம் நாமம் சூட்டப்பட்டவர். இலங்கை அரசியல் போக்கையே திசைதிருப்பி, இனவாதத்தை முன்னிலைப்படுத்தி அரசியல் நடத்திய சாணக்கியரான ஜே.ஆரும் அவரைச் சூழவிருந்த இனவாத கடுங்கோட்பாளர்கள் கூட்டமும் திட்டமிட்டு உருவாக்கியதே 1983ஆம் ஆண்டின் ஜூலைக் கலவரம்.

தமிழ் இனவிடுதலை வேட்கையுடன் ஒன்றுதிரண்டு அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க முயன்ற தமிழ் இளைஞர்களைக் குறிவைத்து, வேட்டையாட அரச படைகளை ஜே.ஆர் ஏவிவிட்ட நிலையில், விடுதலை வேட்கைமிக்க தமிழ் மறவர்கள் மறைந்திருந்து தாக்கியழிக்கும் 'கெரில்லா' போர் உத்தி மூலம் இராணுவத்துக்கு அடிக்கடி இழப்புகளை ஏற்படுத்திவந்த - தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கால கட்டம் அது.

சாள்ஸ் அன்ரனியின் இழப்பு

1983 ஜூலை மாதம் 15ஆம் திகதி இராணுவத்தால் மேற்கொள்ளப் பட்ட சுற்றிவளைப்பு ஒன்றின்போது சாவகச்சேரி - மீசாலையில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களான சீலன் எனப்படும் லூக்கஸ் சாள்ஸ் அன்ரனி மற்றும் ராமநாதன் அருள்நாதன் ஆகிய இரு போராளிகள் வீரமரணத்தைத் தழுவ நேரிட்டது. இவர்களில் சீலன் எனப்படுபவர் சாள்ஸ் அன்ரனி. திறமையும் துணிவும் மிக்கதொரு போராளியாகத் திகழ்ந்தவர் சாள்ஸ் அன்ரனியின் இழப்பு விடுதலைப் புலிகள், அமைப்பைப் பொறுத்தவரை பேரிழப்பாகக் கருதப்பட்டது.

சாள்ஸ் அன்ரனியின் மரணத்துக்குப் பழிக்குப் பழிவாங்கும் முயற்சியாகத் திட்டமிடப்பட்டதே 1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி நள்ளிரவு திருநெல்வேலியில் இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான அதிரடித் தாக்குதலாகும். சுதந்திர இலங்கையின் வரலாற்றில் விடுதலைப்


செல்லக்கிளி

புலிகளின் தாக்குதலில் ஒரே தடவையில் 13 இராணுவத்தினரின் உயிர் பறிக்கப்பட்ட முதலாவது சம்பவமாக இது

## ஆடிக் கலவரத்தின் அவல நினைவுகள்...

அமைந்தது.

வெவ்வேறு தரங்களைச் சேர்ந்த 15 இராணுவத்தினர் அடங்கிய அணி ஒன்று அன்றைய இரவு வீதிரோந்து நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டது. குருநகர் இராணுவ முகாமிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் நாகவிகாரை, நல்லூர், கோப்பாய், உரும்பிராய், கோண்டாவில், கொக்குவில் மற்றும் கல்வியங்காடு ஆகிய பகுதிகளில் இரவு வீதி ரோந்துக் கடமையிலும் ஈடுபட்ட அக்குழுவினர் தாம் பயணம் செய்த ஜீப் மற்றும் டிரக் ஆகிய இரு வண்டிகளில் பலாலிவீதி வழியாக குருநகர் இராணுவ முகாமிற்குத் திரும்பிக் கொண்டிருந்த சமயத்தில் நள்ளிரவு வேளை திருநெல்வேலி சந்திக்கு அருகில் - தபாற்பெட்டிச் சந்தியில் - தயாராகக் காத்திருந்த விடுதலைப் புலிகளின் தாக்குதலை எதிர்கொள்ளநேரிட்டது. முன்னால் சென்ற ஜீப் வண்டி நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர் கண்ணிவெடியில் சிக்கிச் சிதறியதையடுத்து பின்னால் சென்ற 'டிரக்' வண்டிமீது பாதையின் இரு மருங்கிலும் மறைந்திருந்த விடுதலைப் புலிகளால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. தாக்குதலைச் சற்றும் எதிர்பார்த்திராத இராணுவத்தினரால் உத்வேகம் மிக்க விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியவில்லை. அரைமணி நேரம் இடம்பெற்ற பரஸ்பரத் துப்பாக்கிப் பிரயோகம் ஓய்ந்தவேளையில் 12 இராணுவத்தினர் உயிரிழந்திருந்தனர். காயங்களுடன் ஒருவாறு பதுங்கி மறைந்து கொள்ள முடிந்த மூன்று இராணுவத்தினரில் இருவர் கடும் காயமுற்றிருந்தனர். அதேவேளை, விடுதலைப் புலிகள் தரப்பில் மிகமுக்கிய உறுப்பினரான செல்லக்கிளி அம்மான் இராணுவத்தினரின் பதில் தாக்குதலில் வீர மரணமெய்த நேர்ந்தது.

உயிர்தப்பிய சிப்பாயின் அனுபவம்!


உயிர் தப்பிய இராணுவ வீரர்களில் ஒருவரான உபாலிபெரேரா 22 ஆண்டுகள் கழிந்துவிட்ட இன்றைய நிலையில் குறிப்பிட்ட அத்தாக்குதல் சம்பவம் குறித்துச் சிங்களப் பத்திரிகை ஒன்றில் தமது அனுபவங்களை விவரித்திருந்தார்.

சம்பவம் இடம்பெற்ற சமயம் கோப்ரல் தரப் பதவியை வகித்த அவர், பயங்கரமான சூழ்நிலையில் துணிச்சலுடன் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து பலாலி வீதி வழியாகச் சென்று கோண்டாவில் பஸ் டிப்போவிலிருந்து பொலீஸாருக்குத் தகவல் தெரிவித்தமைக்காக சம்பவத்துக்கு அடுத்த நாள் சம்பவம் குறித்து விசாரணைசெய்ய யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த அப்போதைய இராணுவத் தளபதி ஜெனரல் திஸ்ஸ வீரதுங்கவினால் உடனடியாக இராணுவ சார்ஜன்டாக பதவி உயர்த்தப் பட்டாராம். இன்றும் லெப்டினன்ட் தரத்தில்இராணுவத்தில் சேவையாற்றி வரும் உபாலி பெரேராவின் திகில் அனுபவங்கள் சிங்கள வாசகர்களைச் சிந்திக்கத் தூண்டுமோ என்னமோ, - நிச்சயம் இந்த 22 வருடகால இடைவெளியில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பரிணாம வளர்ச்சியையும் தமிழீழ விடுதலைப் போராளிகளின் வியத்தகு வீரஞ்செறிந்த தியாக வரலாறுகளையும் அச்சம் கலந்ததோர் உணர்வுடன் அசைபோட்டுப் பார்க்க ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும்.

சம்பவம் இடம்பெற்ற இடத்தில் உயிரிழந்த 12 இராணுவத்தினரின் சடலங்களுடன், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்த மற்றொரு சிப்பாயின் சடலத்தையும் மற்றும் காயங்களுடன் உயிர் தப்பிய இரு இராணுவத்தினர் ஆகியோரையும் அடுத்த நாள் - ஜூலை 24 ஆம் திகதி - கொழும்புக்கு கொண்டு செல்ல அரசு எடுத்த தீர்மானத்தால் நாட்டில் பெரும் கலவரமொன்று உருவாக இடமேற்பட்டது.

இது உண்மையில் அரசினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட - செயற்பாடே என்பது அடுத்து இடம்பெற்ற சம்பவங்களின் மூலம் நிச்சயமாயிற்று. நாட்டில் சமநீதி, வாய்ப்பு, கௌரவம் வேண்டிப்போராட ஆரம்பித்த தமிழ் இளைஞர்களின் கரந்தடி நடவடிக்கைகளால் எரிச்சலும், ஆத்திரமும் கொண்டிருந்த அரச இயந்திரம் தான் எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உளவியல் ரீதியாக, நாம் நிர்க்கதியானவர்கள்; அரசுக்கு எதிராகச் செயற்பட நினைத்தால் நாம் தாக்கப்பட்டு அழிக்கப்படலாம்; நாம் எப்போதும் சிங்கள பௌத்த ஆட்சியின் தயவில் வாழவேண்டிய இரண்டாம் தரப் பிரஜைகள் என்ற எண்ணத்தை, அச்ச உணர்வை தமிழர்களது நெஞ்சில் பதியவைக்கும் நோக்கில் திட்டமிட்டு அரங்கேற்றிய நாடகமே - கலவரமே - 1983 ஜூலை கலவரம் என்பதை உறுதி செய்வதற்கு கலவரம் இடம்பெற்ற சில நாள்களின் பின்னர் அரசுத் தலைவர்கள் வெளியிட்ட கருத்துகளை உதாரணம் காட்ட இயலும்.

83 ஜூலை 24 ஆம் திகதி இரவு வெடித்த கலவரம் எத்தனையோ தமிழ் மக்களின் உயிர்களைப் பறித்தும், உடைமைகளைக் கொள்ளையிட்டும், தீயிட்டு நாசம் செய்தும், எத்தனையோ தமிழ்ப் பெண்களை மானபங்கப்படுத்தியும் அரக்கத்தனமான -


தங்கத்துரை

மனிதத்துவத்தையே மறந்து - மிலேச்சத்தனமான மிருகங்களாக மாறி கொடூரம் புரிந்தனர் சிங்களக் காடையர்கள். அவர்களைத் தடுத்து நிறுத்தி அப்பாவித் தமிழ் மக்களைக் காப்பாற்றும் பொறுப்பு மிக்க பாதுகாப்புப் படையினரும், பொலீஸாரும் காடையர்களைத் தூண்டிவிட்டு ஊக்க

**வியெஸ்ரி**

மளித்து தமிழ் மக்களின் உயிர் உடைமைகளைச் சூறையாட வைத்ததைக் கண்டு உலக நாடுகள் அதிர்ச்சி அடைந்த போதிலும் ஆதரவு காட்ட முன்வரவில்லை.

கடைசியில் அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி தமது விசேட தூதுவராக வெளியுறவு அமைச்சர் நரசிம்மராவை அனுப்பிவைத்ததைத் தொடர்ந்து கலவரம் ஆரம்பித்து ஐந்து

(13ஆம் பக்கம் பார்க்க)

# மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் நீரிழிவு நோய்க்கு நவீன சிகிச்சை வசதி

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் நீரிழிவு நோய்க்கு நவீன முறையில் சிகிச்சை வழங்குவதற்கென நீரிழிவு சிகிச்சை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து இரத்தினம் அறப்பணி நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்பட்ட இந்த நீரிழிவு சிகிச்சை நிலையம் நாளை 24ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்குத் திறந்து வைக்கப் படுகின்றது.

இந்த வைத்தியசாலை முன்னைய காலங்களில் மகப்பேறு, கண்சத்திர சிகிச்சை ஆகியவற்றுக்குப் பெயர் போன வைத்தியசாலையாக விளங்கியது. இங்கு சிறந்த சேவை உள்ளம் கொண்ட பல பிரபலமான வைத்தியர்கள் சேவை புரிந்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த கால யுத்தத்தினால் பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்ட இந்த வைத்தியசாலை 1996 ஆம் ஆண்டு தனது சேவையை மீள ஆரம்பித்து இன்று நவீன வசதிகளைக் கொண்டதும் பல்துறை வைத்திய நிபுணர்களை உள்ளடக்கியதுமாகத் திகழ்கின்றது.

ஆசியாவிலேயே முதன்முதலாக உருவாக்கப்பட்ட இந்தக் கூட்டுறவு வைத்தியசாலை மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் ஒரு சேவை நிலையமாகத் திகழ்கின்றது. தொடர்ந்து கூட்டுறவுடன் மக்களுக்குப் பணிபுரியும் இலக்கை இழக்காமல் அது செயற்படுகின்றது.

1936 ஆம் ஆண்டு முதல் வைத்திய சேவையில் தனக்கென தனியிடத்தை வைத்துக் கொண்டிருந்த இந்த வைத்தியசாலையின் பணிகள் பின்னர் யுத்தத்



தினால் நிறுத்தப்பட்டன. இப்பணி இப்போது மீண்டும் முன்னெடுக்கப்படுகின்றமை மக்களுக்குப் பயன்தருவதாகும்.

பல்வேறு பொது அமைப்புகள் இந்த வைத்தியசாலைக்கு நவீன சத்திரசிகிச்சை உபகரணங்களை வழங்கியுள்ளன. இதன் மூலம் 24 மணிநேர சேவையாகத் தனது பணியை விஸ்தரித்து மருத்துவ சேவைகளை வழங்குகின்றது இவ்வைத்திய சாலை.

வைத்தியசாலையின் சேவைகள்

24 மணிநேரமும் செயற்படும் வெளி நோயாளர் பகுதி, உள்ளக நோயாளர் பகுதி, மகப்பேற்று வசதி, ஆய்வுகூட வசதி மற்றும் கண் வைத்திய நிபுணர் சேவை, மகப்பேற்று வைத்திய நிபுணர் சேவை, இருதய வைத்திய நிபுணர் சேவை, பற்சிகிச்சை வைத்தியர் சேவை, நீரிழிவுச் சிகிச்சை ஆகிய வைத்திய சேவைகளை இந்த வைத்திய சாலையில் பெற்றுக்கொள்ள முடியும்.

வைத்தியசாலை புதுப்பொலிவு

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இந்த வைத்தியசாலை சோ.வேலாயுதத்தின் தலைமையில் மீள ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின் அமரர் எம். இரத்தினசிங்கத்தின் அயரா உழைப்பினால் வளர்ச்சி பெற்றது. அமரர் இரத்தினசிங்கம் தனது ஓய்வூதியப் பணத்தினை வைத்தியசாலையின் வளர்ச்சிக்கே செலவு செய்து பல்வேறு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியைப் பெற்று வைத்தியசாலைக்கு உயிர்ப்பூட்டியுள்ளார். தொடர்ந்து ஓய்வுபெற்ற மின்பொறியியலாளர் வி.வேலுப்பிள்ளை தலைமையில் வைத்தியசாலைப் பணிகள் விரிவுபடுத்தப்பட்டு இப்போது நீரிழிவு சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்படுகின்றது.

நீரிழிவு சிகிச்சை நிலையம்

இங்கிலாந்தின் இரத்தினம் நிறுவனத்தினரின் (Ratnam Founation) அனுசரணையுடன் இந்த நீரிழிவுச் சிகிச்சை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. நீரிழிவு நோயாளர்கள் இங்கு பதிவு செய்து கொள்வதன் மூலம் பரிசோதனைகளை இலவசமாக மேற்கொள்ளமுடியும். நல்ல பரிசோதனை, உணவுக் கட்டுப்பாட்டுக்கு வேண்டிய ஆலோசனை, சிறந்த சிகிச்சை என்பவற்றை இந்த நிலையத்தில் நோயாளர்கள் இலவசமாகப் பெற்றுக் கொள்ளமுடியும்.

வைத்தியசாலைக்கான உதவிகள்

இந்த வைத்தியசாலை பிரித்தானிய அரசின் நிதியுதவியுடன் ஜி.ரி. இசற் நிறுவனத்தினால் புனரமைப்புச் செய்யப்பட்டது. ஒரு தொகுதி வைத்திய உபகரணங்களை நெதர்லாந்து அரசு வழங்கியது. மகாராஜா கூட்டு நிறுவனம் கண் நுணுக்குக் காட்டி உபகரணத்தை வழங்கியது. யு.எஸ்.எவிட்ஸ் நிறுவனத்தின் உதவியுடன் இரண்டு வைத்திய விடுதிகள் புனரமைக்கப்பட்டன. அத்துடன், மகப்பேற்றுச் சத்திர சிகிச்சைக்கான நவீன உபகரணங்களையும் யு.எஸ்.எவிட்ஸ் வழங்கியது. இங்கிலாந்திலுள்ள எஸ்.சர்வானந்தா, டாக்டர் நித்தியானந்தன் ஆகியோர் இரத்தினம் அறப்பணி நிறுவனத்தின் உதவியுடன் நீரிழிவு சிகிச்சை நிலையம் ஒன்றை நவீன வசதிகளுடன் அமைக்க உதவியுள்ளனர். இவ்வைத்திய சாலையில் உள்ள வைத்திய உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து பெறப்பட்டவை. யாழ்.குடாநாட்டில் உள்ள எந்தவொரு வைத்தியசாலையிலும் காணப்படாத நவீன கண்பார் வைப்

**என்.அகிலன்**
*வட்டுக்கோட்டைச் செய்தியாளர்*

புல இயந்திரம் இவ்வைத்தியசாலையிலேயே காணப்படுகின்றது. கலிபோர்னியா ரி.ஆர்.ஆர்.ஓ நிறுவனமும் இவ்வைத்தியசாலைக்கு உதவி வருகின்றது.

ஒட்டுமொத்தத்தில் ஒரு முழுமையான வைத்திய சேவையை மக்களுக்கு வழங்குவதற்கு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை தயாராகிவிட்டது.

*

# செட்டிபுலம் கிராமத்தில் அபிவிருத்தித் திட்டங்கள்

## ஐ.நா. அபிவிருத்தி நிறுவன உதவியுடன்

வேலணை,ஜூலை23

வேலணைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட செட்டிபுலம் கிராமம் சுமார் 25 லட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டுவருகின்றது.

ஐ.நா. அபிவிருத்தித்திட்ட நிறுவனத்தின் கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஜே/13, ஜே/15, ஜே/16 ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதான செட்டிபுலம் கிராமத்தில் பொது மண்டபம், சந்தை ஆகியன அமைக்கப்படுவதுடன் இரு வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக ஜே/15 கிராம அலுவலர் பிரிவில் பொதுமண்டபத்திற்கான அடிக்கல் நடும் விழா கடந்த 15ஆம் திகதி இடம்பெற்றது.

கட்டடத்துக்கான அடிக்கல்லை அந்த நிறுவனத்தின் யாழ். மாவட்டப் பிரதம திட்ட அதிகாரி திருமதி ஞானம்பிகை சிவசுந்தரம் நட்டார்.

இந்தநிகழ்வில் கிராம சேவையாளர்களான கா.சிவஞானம், ம.அம்பிகைபாகன், திருமதி சி.நீலலோஜினி மற்றும் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், கடற்றொழில் திணைக்கள அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (3-167-202)

# மீள்குடியமர்வுக் கொடுப்பனவு; நெதர்லாந்து அதிகாரிகள் ஆய்வு

வேலணை, ஜூலை23

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த உதவினவா என்பது குறித்து நெதர்லாந்து அரச அதிகாரிகள் ஆய்வு ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

மீளக்குடியமர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவைப் பயனாளிகள் என்ன முறையில் பயன்படுத்தினார்கள், கொடுப்பனவு தாமதமாக வழங்கப்பட்டதற்கான காரணம், பயனாளிகளின் குடும்ப நிலைமைகள், மேற்கொண்டும் பயனாளிகளுக்கு உள்ள தேவைகள் என்பவை சம்பந்தமாக இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் ஜே/14 கிராம அலுவலர் பிரிவும் நயினாதீவில் ஜே/36 கிராமஅலுவலர் பிரிவும் ஆய்வுக்கான களங்களாகத் தெரிவுசெய்யப்பட்டன.

கடந்த 16ஆம் திகதி வேலணைப் பிரதேச செயலர் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற ஆய்வுப்பட்டறையில் நெதர்லாந்து அரசின் இலங்கை தூதரகத்தின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் கிராம அலுவலர்கள், பயனாளிகள், கிராமிய புனர்வாழ்வு, புனரமைப்புக் குழுத்தலைவர் ஆகியோரிடம் நிலைமைகளை நெதர்லாந்து அதிகாரிகள் கேட்டறிந்தனர். (167-3-202)

# விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் நடத்திய போட்டிகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை23

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தினால் அண்மையில் தரம்11 மாணவர்களிடையே மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட விஞ்ஞானப் பேச்சு போட்டி மற்றும் வினாவிடைப் போட்டிகளுக்கான முடிவுகள் யாழ். வலயக்கல்வித் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் முறையே முதல் மூன்று இடங்களைப்பெற்ற மாணவர்களின் விவரங்கள் வருமாறு:-

**விஞ்ஞானப் போட்டி**

ச.செந்திகுமரன் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, அ.பிரியந்தினி - யா/இந்து மகளிர் கல்லூரி, ந.சாகினி - யா/இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம், ச.கோபிநாத் - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி (இருவருக்கும் மூன்றாமிடம்)

எழுத்து மூலமாக நடத்தப்பட்ட வினாடிவிடைப் போட்டியில் முதல் இரு இடங்களை முறையே யாழ். இந்துக் கல்லூரியும் யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் பெற்றுக் கொண்டன இவற்றிற்கிடையே நடத்தப்பட்ட வாய் மொழிமூல வினாடிவினா இறுதிப் போட்டியிலே யாழ். இந்துக் கல்லூரி முதல் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

எழுத்து மூலமாக நடத்தப்பட்ட வினாவிடைப் போட்டியில் முதல் இரண்டு இடங்களை பெற்ற பாடசாலைகள் மற்றும் மாணவர்களின் விவரம் வருமாறு.

**யாழ். இந்துக் கல்லூரி** - ம.பிரதீபன், ப.நிரோசன், அ.வாமணன், சி.சிவமைந்தன், ந.கௌசிகன். **யா/ மெடிஸ்த பெண்கள் கல்லூரி** - கு.தர்சினி, ச.கார்த்திகா, பி.மதுசா, பா.கிருஷானி, வ.கிருஸ்ணானந்தி.

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் கொழும்பில் நடை பெறவுள்ள 6 மாவட்டங்களுக்கிடையிலான விஞ்ஞான வினாடிவினாப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி பங்கேற்கவுள்ளது.

எழுத்து மூலமாக நடத்தப்பட்ட வினாவிடைப் போட்டியில் அதி கூடிய புள்ளியை இளவாலை கன்னியர்மட மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ந.சாகினி பெற்றுள்ளார். (ஒ-ரி)

## சைவகுருமாருக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை23

அந்தண சிவாச்சாரியர்கள், ஆலயங்களில் கடமையாற்றிவரும் குருமார்கள் ஆகியோருக்கு இந்துசமயகலாசார அலுவல்கள் அமைச்சின் ஊடாக அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கமைய 2001ஆம் ஆண்டுக்கு முன்னர் விண்ணப்பித்தவர்களும் புதிதாக விண்ணப்பிக்கவுள்ளோரும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை ஆனைப்பந்தியில் அமைந்துள்ள சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத் தலைமைச் செயலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

புதிய விண்ணப்பதாரர் பிறப்புச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, 3x2½ சென்றி மீற்றர் அளவிலான குருலட்சணத்தோடு இரண்டு கலர் புகைப்படங்கள் ஆகியவற்றுடன் வருகை தர வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-203)

# சமைக்காத 'ஸொஸேஜஸ்' சாப்பிட்ட மாணவன் மரணம்!

சமைக்காத 'ஸொஸேஜஸ்' சாப்பிட்டதால் நோய்வாய்ப்பாட்டார் எனத் தெரிவிக்கப்படும் மாணவர் ஒருவர் கடந்த புதன்கிழமை மரணமானார்.

நிட்டம்புவ மீரிகொட வித்தியாலயத்தில் ஐந்தாம் தரத்தில் பயின்ற லக்ஷித பண்டாரவே மரணமான மாணவராவார்.

இந்த மாணவனின் தாய் நிட்டம்புவவில் உள்ள கடையொன்றில் 'ஸொஸேஜஸை' வாங்கி வந்துள்ளார். அதனைச் சமைப்பதற்கு முன்னரே லக்ஷித உண்டுள்ளார்.

அன்றை தினமே அவருக்கு காய்ச்சல் பீடித்தது. வாந்தியும் வந்தது. நிட்டம்புவ, வத்துப்பிட்டிய,வைத்தியசாலையில் லக்ஷித சேர்க்கப்பட்டார்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு லேடி ரிஷ்வே வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டார்.

அங்கும் லக்ஷிதவைக் குணப்படுத்த முடியவில்லை. பின் களுபோவில வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்டார். மாணவர் சிகல்லா நோய்க்கு உட்பட்டுள்ளார் என களுபோவில டாக்டர்கள் இனங்கண்டனர். கடந்த புதன் கிழமை லக்ஷிதவுக்கான சிகிச்சை பயனளிக் காமையால் மரணமானார்.

லக்ஷிதவின் இளைய சகோதரர் அதே 'ஸொஸேஜஸை' சமைத்ததன் பிறகு சாப்பிட்டுள்ளார். அவரும் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# 59 பொலீஸ் உத்தியோகத்தர்கள் பதவி இறக்கம் செய்யப்பட்டனர்

கொழும்பு,ஜூலை23

போதிய தகுதியின்மை காரணமாக 59 பொலீஸ் அதிகாரிகள் தேசிய பொலீஸ் ஆணைக்குழுவினால் பதவியிறக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பொலீஸ் அதிகாரிகள் 2003ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பதவி உயர்வு பெற்றனர். இவர்களின் பதவி உயர்வு குறித்து தேசிய பொலீஸ் ஆணைக்குழு விசாரணை நடத்தியது.

அந்த விசாரணையின்போது இவர்கள் பதவி உயர்வு பெறத் தகுதியற்றவர்கள் எனத் தெரியவந்தது. இதனையடுத்தே தேசிய பொலீஸ் ஆணைக்குழு இவர்களைப் பதவி இறக்கியுள்ளது.

அதன்படி சப் இன்ஸ்பெக்டர்களாகப் பதவி உயர்வு பெற்ற 17 பேர் பொலீஸ் சார்ஜன்ட்களாகவும், பொலீஸ் சார்ஜன்ட்களாகப் பதவி உயர்வு பெற்ற 42 பேர் பொலீஸ் கான்ஸ்டபிள்களாகவும் பதவியிறக்கம் செய்யப்பட்டுள்ளனர். (க)



இசைத்தென்றல் ம.யேசுதாசனின் இசைமாலை இறுவட்டு வெளியீடு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் அ.யோன்சன், விழாநாயகனான யேசுதாசனுக்கு மாலை அணிவித்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: அரியாலைச் செய்தியாளர்)*



அச்சுவேலி மத்திய கல்லூரியில் அண்மையில் முத்தமிழ் விழா நடைபெற்றது. விழாவில் பாடசாலை ஆரம்பப் பிரிவில் கற்றல் கற்பித்தல் சுவரோவியங்களை வரைந்த முகிழ்நிலை ஆசிரியர் சி.சந்திரசுபநேமிக்குலயன். டாக்டர் தியாகராசா பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

கல்லூரி அதிபர் வே. பாலசுப்பிரமணியம் மற்றும் யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி. கமலநாதன் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

*(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)*

# நூல் வரிசை



நூல் : வானில் மிதந்த வள்ளுவர் வாய்மொழி
ஆசிரியர் : சோ.பரமசாமி (பி.எஸ்.சி)
வெளியீடு : தாவடியூர் சித்தவைத்தியர் அமரர் சி.ஆ.பொன்னம்பலம் நினைவு வெளியீடு

மக்களின் உள்ளங்களிலே நல்ல பல கருத்துக்கள் பதியும் வண்ணம் சொல்லப்படுவது, தான் ஒரு நல்ல எழுத்தாளனுக்கு அழகு. உலகப் பொது மறையாகிய திருக்குறளிலே மக்களின் நல்வாழ்வுக்கு அடிப்படையான பல கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. இசை, நடனம், நாடகம் போன்ற கலைத்துறையில் ஆக்கங்களை உருவாக்கும் கலைஞர்கள் திருக்குறள் போன்ற மக்களுக்குப் பயன்தரக் கூடிய கருத்துக்களைத் தமது ஆக்கங்களூடாகச் சமுதாயத்துக்கு வழங்கவேண்டும்.

அந்த வகையிலே, சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்னர் திருவள்ளுவரை முன்னிலைப்படுத்தி விவசாயம் தொடர்பான நல்ல கருத்துக்களை நாடகருபத்தில் அமைத்து வழங்கியவர் ஓய்வுபெற்ற மொழிபெயர்ப்பாளரும் நாடக எழுத்தாளருமான இணுவில் சோ.பரமசாமி.

விவசாயம் தொடர்பாகத் திருவள்ளுவர் வழங்கிய கருத்துக்களை அடிப்படையாக வைத்து நாடகங்களை எழுதி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஒலிபரப்பிய கிராம சஞ்சிகை என்ற பகுதியின் மூலமாக ஒலிபரப்ப வைத்தவர் சோ.பரமசாமி.

அவ்வாறு ஒலிபரப்பப்பட்ட பல நாடகங்களுள் பத்து நாடகங்களைத் தொகுத்து 'வானில் மிதந்த வள்ளுவர் வாய்மொழி' என்ற தலைப்பில் நூலுருவாக்கி, இன்றைய மக்களும் அவற்றைப் படித்தறிய வைத்துள்ளார். தமது தந்தையாரகிய தாவடி சித்த வைத்தியர் அமரர் சி.பொன்னம்பலம் (பரமுவைத்தியர்) நினைவாக இந்நூலை வெளியிட்டுள்ளார். இணுவில் கலையக மண்டபத்தில் அண்மையில் நூல் வெளியீடு இடம்பெற்றது.

படித்துவிட்டு வேலையற்று இருக்கும் இன்றைய இளைஞர் சமுதாயத்துக்குப் பரந்து கிடக்கும் நிலப்பரப்பைப் பண்படுத்திப் பொருளாதார வளர்ச்சி பெறக்கூடிய வழிமுறைகள் பலவற்றை தமது நாடகங்கள் மூலம் நூலாசிரியர் முன்வைத்துள்ளார். கிராம மக்களின் வாழ்வியல்முறை இவரது நாடகங்களில் துலாம்பரமாகத் தெரிகின்றன.

இந்த நாடக நூலை வாசிக்க முனையும் வாசகர்களுக்கு, ஒரு நாடகம் முடிந்ததும் நூலை மூடி வைத்துவிட மனமின்றி அடுத்த நாடகம் என்ன சொல்லப் போகின்றதோ என்ற ஆவலைத் தூண்டுபவையாகவுள்ளன. இது எழுத்தாளர் பரமசாமிக்குக் கிடைத்த வெற்றி - மதிப்பு.

**வி.பி.சர்மா**

## நினைவலைகள்

'ஈழநாடு' பத்திரிகையின் செய்தி ஆசிரியர் கே.ஜி.மகாதேவா 'நினைவலைகள்' என்ற தலைப்பில் முன்னர் தமிழில் வெளியிட்டிருந்த தமது நூலின் ஆங்கிலப் பதிப்பொன்றை இப்பொழுது வெளியிட்டிருக்கின்றார்.

சென்னை மித்ரா அன் கிறியேஷன் நிறுவனத்தின் பதிப்பாக வெளிவந்துள்ள இந்நூல் அழகிய முறையிலும் தெளிவான கணனி அச்சிலும் பதிவாகியுள்ளது.

'ஈழநாடு' நாளேட்டில் நீண்டகாலம் பணியாற்றி தங்களை பத்திரிகையாளர் களாக நிலைநாட்டிக் கொண்ட பலரும் வெளிநாட்டிலும் ஈழத்திலும் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில் பலர் தமது அனுபவங்களையும், எழுத்துக்களையும் நூல் உருவில் வெளியிட்டுள்ளனர் - அவர்களது வரிசையிலே மகாதேவாவும் ஒருவர்.

இவர்களில் பலர் தமிழில் வெளியிட்ட தமது நூல்களை ஆங்கிலத்திலும் மொழியாக்கம் செய்துவெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டில் அவர்களுக்கு அந்தவசதி இருக்கிறது. (ப)

# பண்டைய இருப்பை ஆதாரங்களுடன் நிருபிக்க தமது வாழ்வை அர்ப்பணித்தவர் கலைஞானி

*மாமனிதர்கலைஞானி செல்வரத்தினத்தின் 72 ஆவது பிறந்த தினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இந்தஆக்கம் பிரசுரமாகிறது.*



1933 ஆம்ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி கலைப்பூமியான குரும்பசிட்டி கிராமத்தில் அரியகுட்டி தம்பதிகளின் மகனாகப் பிறந்தார் கலைஞானி செல்வரத்தினம். பாடசாலைப் பருவத்திலேயே கலை ஈடுபாடு கொண்டவராக அவர் விளங்கினார். தொல்பொருள் சேகரிப்பும், ஆய்வும் அவர் வாழ்வை ஆக்கிரமித்துக் கொண்டன.

புகைப்படத்துறை, ஓவியம், எழுத்துத்துறை, நாடகம் என்பவற்றிலும் ஈடுபாடு காட்டிவந்தார். இவருடைய அரும்பொருள் சேகரிப்பில் சிறப்பாகத் தமிழர் நாகரிகம் பற்றிய பல்வேறு பொருள்கள் அடங்கியிருந்தன. நாட்டுப் போர்ச்சூழல் இவர் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்திய போதிலும் அவர் தனது பணியைக் கைவிடவில்லை.

நிரந்தர இருப்பிடம் இல்லாத நிலையிலும் நோய்வாய்ப்பட்ட போதிலும் அவரது வேகம் தணியவில்லை. தனது உடல், பொருள், ஆவி மூன்றையும் தமிழ் இனத்திற்காகவும் தமிழ் மொழிக்காகவும் கலை, கலாசாரத்திற்காகவும் அர்ப்பணித்து ஒரு பிரமச்சாரியாக அவர் வாழ்ந்து வந்தார்.

ஈழத்தமிழ் மக்களின் நீண்டகால வரலாற்று ஆதாரங்களை சேகரிக்கும் பணியில் தனிநபராக ஈடுபட்ட அவரின் சேவை 54 வருடங்கள் தொடர்ந்தது.

தமிழினத்தின் தாயகமான வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களின் பண்டைய இருப்பை ஆதாரங்களுடன் நிலைநிறுத்தும் உயரிய முயற்சியில் தனதுவாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த அவர், பேரினவாதிகளும் அவர்களுக்குத் துணைபோகும் சக்திகளும் காலத்திற்குக் காலம் தமிழ் மக்களின் வரலாற்றை மூடிமறைக்கக் கங்கணம் கட்டி நின்ற வேளைகளிலும் -

தொல்பொருள் சின்னங்களை அழித்தொழித்து தமிழர்களை வரலாறு அற்றவர்களாக - வந்தேறு குடிகளாகக் காட்ட முற்பட்ட சந்தர்ப்பங்களிலும் அவற்றிற்கு எதிராகக் குரல் எழுப்பி உண்மை நிலையைப் புரியவைப்பதில் தனதுபங்களிப்பை நல்கியவர்.

இத்தகைய உன்னதமான பணிகளுக்காக 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற முத்தமிழ்விழாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்களிடம் உயரிய கௌரவப் பட்டமான 'மாமனிதர்' விருதைப் பெற்றுக்கொண்டார்.

**எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி**

வரலாற்று நாயகனாக ஈழத்தில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்ட அவரின் ஆவி 2001 ஆம் ஆண்டு டிசெம்பர் 28ஆம் திகதி பிரிந்தது. அடுத்த சந்ததிக்காக வெண்மை உடுத்து, நீண்ட வெள்ளைத் தலைமுடியுடன் மிகமெதுவாக எம் மண்ணில் உலாவிய கலைஞானியை நினைத்திருப்போம்.

*

## கதிர்காமம் பள்ளிவாசலில் பக்கீர் பாவாக்கள் அற்புதம்!

காலி,ஜூலை23

கதிர்காமம் பள்ளிவாசலில் கிழக்கிலங்கை பக்கீர் பாவாக்களின் ரிபாயிராதீபு தினசரி இரவு 9 மணிக்கு பள்ளிவாசல் முற்றவெளியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பாவாக்கள் கூரியகத்திகளாலும் உளிகளாலும் கம்பிகளாலும் கண்களைக் குத்திக் கொண்டும் வாள்களினால் வயிற்றை வெட்டிக்கொண்டும் நாக்கில் கம்பிக் கூறுகளால் குத்தியும் அற்புதம் செய்துகாட்டுகிறார்கள். அப்போது ஒரு துளி இரத்தமும் வெளியே வராமலிருப்பது பெரும் அற்புதமாக இருக்கிறது. இதனை அங்கு மூவின மக்களும் மிக அதிசயத்துடன் கண்டு அதிசயிக்கின்றனர். கதிர்காமம் பள்ளிவாசல் கந்தூரி எதிர்வரும் 23 ஆம் திகதி பகல் நடைபெறும் என்று அதன் தர்மகர்த்தா எம்.எச். அப்துல்கப்பார் அறிவித்துள்ளார். (ஐ-க)

## உணவகங்களிடையே சுகாதாரப் போட்டி

தென்மராட்சி,ஜூலை23

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உணவுவகைகளைக் கையாளும் நிலையங்களுக்கிடையே போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

நகரசபை செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் இத்தகவலைத் தெரிவித்தார்.

இவ்வருட உள்ளூராட்சி வார நிகழ்வுகளையொட்டி சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இதன் மூலம் சிறந்த முறையில் சுகாதாரத்தைப் பேணும் மூன்று நிலையங்கள் தெரிவுசெய்யப்படவுள்ளன.

இப்போட்டி தொடர்பாக உணவு கையாளும் நிலையங்களைப் பார்வையிட நகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தலைமையில் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

(ஐ-117)

## காணி ஆவணம் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை23

கோப்பாய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட ஆனந்தபுரம் பகுதியில் நீண்டகாலம் குடியிருந்தும்காணி ஆவணங்கள் வழங்கப்படாதவர்களுக்கு அவற்றை வழங்குவதற்குப் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எனவே, குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட உள்ள காணிகள் தொடர்பாக முறைப்பாடு இருப்பின், இருவார காலத்திற்குள் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து முறையிடுமாறு கோப்பாய் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

(எ-202)

## மாடு வளர்ப்போர் கவனத்துக்கு!

அச்சுவேலி,ஜூலை23

பட்டியில் வளர்க்கப்படும் மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் நோய்த்தடுப்பூசி ஏற்றுவதற்குக் கோப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் ஏற்பாடு செய்துள்ளது.

மாட்டுப்பட்டி உரிமையாளர்கள் கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் தொடர்புகொண்டு தமது மாடுகளுக்கு இலவசமாகத் தொண்டை அடைப்பான் தடுப்பூசி ஏற்றுவதற்கான நேரத்தை அறிந்து கொள்ளுமாறு கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

(ஒ-11)

## வயல் அறுவடை விழா

'கெயர்' நிறுவனத்தின் அனுசரணையுடன் அராலி தெற்கில் நடத்தப்படும் வயல் பாடசாலையின் வயல் அறுவடைவிழா, இன்று சனிக்கிழமை முற்பகல் அராலி தெற்கு சிந்தாமணிப்பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக வலி.மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் கலந்துகொள்வார்.

(3-135-202)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




2005 - 07 - 23

*சிவகுமார் - சுபாஷினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் **ஹரிஹரன்** தனது முதலாவது பிறந்தநாளை இன்று (23.07.2005) சனிக்கிழமை உடுவிலில் கொண்டாடுகின்றார்.*

*அவரை அப்பா, அம்மா, கார்த்திக் அண்ணா, பிரவீன் அண்ணா, உடுவில் தாத்தா, அம்மம்மா, காந்தன் சித்தப்பா, சுபாச்சித்தி, சசிமாமா மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் ஹரிஹரன் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சுகமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.*

உடுவில். (#44290)(42-19) தகவல்: **தாத்தா.**


## கணபதி ஜோதிட நிலையம்

**பண்டிட் ஐயப்ப சாஸ்திரி**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார். ஒரு முறை சந்தியுங்கள்.

தொடர்பு: **SHANJAEYA REST HOUSE,**
NO.5, RAKKA ROAD (ICRC Office அருகில்),
JAFFNA.T.P.: 077 9173940. (37987)(21-14-19-42)

## ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து வந்துள்ள
**ஸ்ரீ ராமகிருஸ்ண சாஸ்திரிகள்**
**ஸ்ரீ பாலகங்காதர சாஸ்திரிகள்**

கல்வி. வியாபாரம். திருமணப் பொருத்தம். கணவன்-மனைவி உறவு. அரசியல் பிரச்சினைகள். வீடு - கடை வாஸ்து. வெளிநாட்டுப் பிரயாணம். பிள்ளைகள் பாக்கியம். ஆயுள்ரேகை. எண்கணிதம். கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது

**அறை எண் 01, ரி.கே.ரூறிஸ்ற் இன்,**
இல.200, பலாலி றோட், கந்தர்மடம் சந்தி (அரசடி வீதி).
யாழ்ப்பாணம். T.P.: 021 2225680, 0776627373. (37991)(14.19.42)


## யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்

**பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்**

*மேற்படி கூட்டம் 24-07-2005 ஞாயிற்றுக்கிழமை 9.30 மணிக்குப் பாடசாலையில் நடைபெறும். பழைய மாணவர்கள் அனைவரையும் கூட்டத்திற்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

*சி.சிவஞானசுந்தரம்,* தலைவர்.
*த.இராசமோகன்,* செயலாளர்.

(இ/44285)(46-42-14-19)


## BAIRAHA

**புறொயிலர் குஞ்சுகள் விநியோகம்**

35 நாளில் 2 Kg இற்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய நம்பர் - I பகிரா புறொயிலர் குஞ்சுகள் 23-07-2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

தொடர்பு:
றாஜீவ் பாம் - நவாலி றோட், ஆனைக்கோட்டை
கிளை:
- தாடிகை கால்நடைத் தீவன விற்பனை நிலையம் - முதலாம் கட்டை, பருத்தித்துறை.
- றஞ்சித் - 517, ஸ்ரான்லி றோட்.
- மாருதி பாம் - வழக்கம்பரை, தொல்புரம்.
- P.ரவி - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
- றாதா - மாவடி, வட்டுக்கோட்டை
- மதுரா - 221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- கௌரி கால்நடைத் தீவன விற்பனை நிலையம் - பிரதான வீதி, பண்டதரிப்பு .

T.P.No:. 021 222 3529, 021 222 2867, 0776090926

(37984)(46-14-19-42)

உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ,பெரியதோ,
எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும் எந்தநேரமும் துரிதமாகவும்
குறைந்த கட்டணத்தில் அனுப்பிட

மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு விசேடசலுகை

**லண்டனுக்கான 5 Kg பொதிக்கு**
**1 Kg க்கான கட்டணம் 500/=**

**திருமுருகன் கொம் நெற்**

259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, அடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம்,
பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.
Tel - 021 226 4252
Fax - 021 226 4253


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 - 01 - 1979



மறைவு 23 - 07 - 2004

**செல்வி சந்திரதாஸ் யசோதா**

*அன்பான எம் யசோ அம்மா!*
*வாழவேண்டுமென்ற வாஞ்சையோடு - நீ*
*மரணத்தோடு போராடிய போராட்டமும்*
*வாழ்க்கையில் எதிர்பார்த்த - உன்*
*கனவுகளும் தோற்றுப்போயிற்றே!*

**- சந்திரதாஸ் குடும்பத்தினர்.**

முதலாம் ஒழுங்கை,
கொடிகாமம். (37953)(32-14-19-42)




'நியாப்' திட்டத்தின்கீழ் 17 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட வாதரவத்தை பெரியகுளத்தை விவசாய சம்மேளனத்திடம் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் வாதரவத்தையில் நடைபெற்றது.

குளம் புனரமைக்கப்பட்டது தொடர்பான ஆவணத்தை யாழ். மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர் க.சுந்தரேசன், புத்தூர் பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.சத்தியேந்திரன் ஆகியோர் விவசாய சம்மேளனத்தின் தலைவர் எம்.இரத்தினசிங்கத்திடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். தொழில்நுட்ப அதிகாரிகள் மற்றும் விவசாய சம்மேளன உறுப்பினர்களும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)*

# நவாலியில் இரு மயானங்களுக்கு கொட்டகை அமைக்க நிதி உதவி

யாழ்ப்பாணம்,ஜூலை23

நவாலியில் உள்ள இரு மயானங்களுக்குப் புதிய கொட்டகைகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியின் கீழ் நவாலி அரியம்பிட்டி மயானம் மற்றும் நவாலி கொத்துக்கட்டி மயானம் ஆகியவற்றுக்குக் கொட்டகை அமைக்க 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

விரைவில் மேற்படி இரு மயான கொட்டகைகளும் மதிப்பீடு பெறப்பட்டு நவீன வடிவில் அமைக்கப்படும் என வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் மே.சாந்தசீலன் தெரிவித்தார்.

இதேவேளை -

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு நிதியின்கீழ் சாந்தைக் கிராமத்திற்குக் கல்வி, வீதி மற்றும் குடிதண்ணீர் வசதியேற்படுத்திக் கொடுக்கப் புதிய திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகச் செயலாளர் மே.சாந்தசீலன் தெரிவித்தார். (ஒ-185)

## வரணிப் பகுதிக்கு நிதி

வரணி,ஜூலை23

யாழ். நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் வரணி பொது மருத்துவமனைக்கு ரூபா 90 ஆயிரமும் வரணி மகா வித்தியாலயத்திற்கு ஒரு லட்சம் ரூபாவும் வரணி, இயற்றாலை கலைவாணி சனசமூக நிலையத்திற்கு ரூபா 50 ஆயிரமும் நாவற்காடு தனிவளை சனசமூக நிலையத்திற்கு ரூபா 35 ஆயிரமும் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-170)

# புனர்நிர்மாணத் திட்டத்தின்கீழ் தென்மராட்சியில் 60 வீடுகள்

தென்மராட்சி,ஜூலை23

வடக்கு - கிழக்கு மாகாண புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் மேலும் 200 வீடுகள் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் 60 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இவ்வருடம் யாழ். மாவட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் ஆயிரம் வீடுகள் அமைக்கப்படுவதாகவும் -

இத்திட்டத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தில் 100 வீடுகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# 2007இல் தகவல்தொழில்நுட்பப் பாடம் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் கட்டாயமாகும்

அச்சுவேலி,ஜூலை23

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் 2007ஆம் ஆண்டு தொடக்கம் ''தகவல் தொழில்நுட்பம்'' பாடம் குறித்தொதுக்கப்பட்ட கட்டாய பாடமாகக் கொள்ளப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

10ஆம் தரத்திற்கும் 11ஆம் தரத்திற்கும் தொழில்நுட்பப் பாடத்தின்கீழ் தகவல் தொழில்நுட்பப் பாடமும் உள்ளடக்கப்படுகிறது. அத்துடன், முதல் தடவையாகத் தகவல்தொழில்நுட்பப் பாடம் 2006ஆம் ஆண்டில் 10ஆம் தரத்திற்கு அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

2006ஆம் ஆண்டில் தகவல்தொழில்நுட்பப் படத்தை 10ஆம் தரத்தில் தெரிவுசெய்த மாணர்கள் 2007ஆம் அண்டில் ஜி.சீ.ஈ. சாதாதரணதரப் பரீட்சைக்குத் தோற்றமுடியும்.(ஒ-11)




# மன்னார் - யாழ். மாவட்டங்களின் விவசாய சம்மேளனங்கள் சந்திப்பு

வலி.தெற்கு,ஜூலை23

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வருகைதந்து இங்குள்ள விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினர்.

மன்னார் விவசாய சம்மேளனப் பிரதிநிதிகளுடன் 'கெயர்' நிறுவனப் பிரதிநிதிகளான கே.ஜே.குரூஸ், கே.சந்திரசேனன், க.தேவபொன்கலன், வ.சோதிலிங்கம் ஆகியோரும் வந்திருந்தனர்.

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளன அலுவலகத்தில் இரண்டு தினங்களாக இவர்கள் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

மானிப்பாய் மேற்கு விவாசாய சம்மேளன அலுவலகத்தில் இரண்டு தினங்களாக இவர்கள் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவர் சி.பொ.வ.மா.க. முதலியார், ந.கணேஸ், ந.சிதம்பரநாதன் சி.வி.பரமேஸ்வரன் அ.மயில்வாகனம் மற்றும் விவசாயிகள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாண மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன், தலைமைக் காரியாலயப் பெரும்பாக உத்தியோகத்தர் உருத்திரசேனன் உட்பட விவசாய உயர்மட்ட அதிகாரிகளும் கலந்துரையாடல்களில் பங்கேற்றனர்.

சம்மேளனங்களைப் பேணிப்பாதுகாப்பது, நடைமுறைகள் ஒப்பந்த அடிப்படையிலான வேலைதிட்டங்களை மேற்கொள்ளல், நீர்ப்பாசன முறைகள் போன்ற பல்வேறு விடயங்கள் இக்கலந்துரையாடலில் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இரு மாவட்டங்களிடையே விசாய உற்பத்திகளைப் பரஸ்பரம் பரிமாறி கொள்வதன் மூலம் இரண்டு மாவட்டங்களிளதும் விவசாய அபிவிருத்திகளைப் பேணுவது என இக்கலந்துரையாடலின்போது முடிவுசெய்யப்பட்டது. (ஒ-152)

# கரவெட்டி பிரதேச மட்டத்திலான அறநெறிப் போட்டி முடிவுகள்

கரவெட்டி,ஜூலை23

கரவெட்டிப் பிரதேச செயலகத்தால் அறநெறி விழாவை முன்னிட்டு அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அறநெறிப் பாடசாலைமட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

**பண்ணிசை - பிரிவு I**

த.தர்சிகா (வதிரி பூவற்கரைப்பிள்ளையார் ஆலய அறநெறிப் பாடசாலை), ம.ஜெயரூபன் (வதிரி பூவற்கரைப்பிள்ளையார் ஆலய அறநெறிப் பாடசாலை), ச.துமிலுசா (வதிரி பூவற்கரைப்பிள்ளையார் ஆலய அறநெறிப் பாடசாலை).

**பிரிவு II**

ச.சுலக்ஷன் (நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி அறநெறிப்பாடசாலை), க.புனிதா (உச்சில் அம்பாள் அறநெறிப் பாடசாலை), ப.ரேணுகா (உச்சில் அம்பாள் அறநெறிப் பாடசாலை).

**பிரிவு III**

யேர.அஞ்சலா (வதிரி பூவற்கரைப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலை), க.தர்சிகா (உச்சில் அம்பாள் அறநெறிப் பாடசாலை), ம.சஞ்சீபா (வதிரி பூவற்கரைப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலை).

**பிரிவு IV**

இ.தயானி (வதிரி ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரம அறநெறிப் பாடசாலை), அ.றஞ்சிதா(வதிரி அறநெறிப் பாடசாலை), இ.நிரூஷன் (வதிரி ஸ்ரீ பரமானந்த ஆச்சிரம அறநெறிப் பாடசாலை), க.பகீரதன் (வதிரி ஸ்ரீபரமாணந்த ஆச்சிரம அறநெறிப் பாடசாலை).

**பஜனை- பிரிவு I**

வதிரி பூவற்கரைப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, உச்சில் அம்பாள் அறநெறிப் பாடசாலை.

**பிரிவு II**

தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய அறநெறிப் பாடசாலை, பூவற்கரைப்பிள்ளையார் ஆலய அறநெறிப் பாடசாலை, உச்சில் அம்பாள்அறநெறிப் பாடசாலை.

**பிரிவு III**

ஸ்ரீ பரமானந்த ஆச்சிரம இந்து அறநெறிப்பாடசாலை.

**மனனம் - பிரிவு I**

ச.கஜானன் ( தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய அறநெறிப் பாடசாலை) கு.நிவேஜா (உச்சில் அம்பாள் ஆலய அறநெறிப் பாடசாலை) இ.கஸ்தூரி (உச்சில் அம்பாள் ஆலய அறநெறிப் பாடசாலை)

**பிரிவு II**

ர.தீபனா (வதிரி பூவற்கரைப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலை) க. கௌதமி (ஸ்ரீ பரமானந்த ஆச்சிரம அறநெறிப் பாடசாலை) க.கௌதமி (ஸ்ரீ பரமானந்த ஆச்சிரம அறநெறிப்பாடசாலை) நா.சுபாங்கினி (உச்சில் அம்பாள் அறநெறிப் பாடசாலை)

**பிரிவு III - இ.தயானி**

**பேச்சு - பிரிவு I**

ச.துமிலுசா (வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய அறநெறிப் பாடசாலை)

**பிரிவு II**

வீ.திருமகள் (வதிரி பூவற்கரைப்பிள்ளையார் ஆலய அறநெறிப்பாடசாலை) ச.அருண்ராஜ் (வதிரி பூவற்கரைப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை), ஜெ.நிருபிகா (வதிரி பூவற்கரைப்பிள்ளையார் ஆலய அறநெறிப் பாடசாலை)

**பிரிவு III**

இ.மதுரன் (ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரம இந்து அறநெறிப் பாடசாலை)

**பிரிவு IV**

அ.றஞ்சிதா (ஸ்ரீ பரமானந்த ஆச்சிரம அறநெறிப்பாடசாலை).

**வினாடி வினா திறந்த போட்டி**

வதிரி ஸ்ரீ ப்ரமானந்த ஆச்சிரம அறநெறிப் பாடசாலை, கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம், உச்சில் அம்பாள் ஆலய அறநெறிப் பாடசாலை.

**வில்லுப்பாட்டு**

நெல்லியடி தடங்கன் முருகமூர்த்தி ஆலய அறநெறிப் பாடசாலை, வதிரி ஸ்ரீ பரமானந்த ஆச்சிரம அறநெறிப் பாடசாலை.

**நாடகம்**


வதிரி ஸ்ரீபரமானந்த ஆச்சிரம அறநெறிப் பாடசாலை. (எ-70-204)

## பாடசாலைகள் சீரமைப்பு

வரணி,ஜூலை23

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் சேதமடைந்த பாடசாலைகளின் சீரமைப்புப் பணிகளை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் மேற்கொள்ளவுள்ளது.

இதன்படி வெற்றிலைக்கேணி றோ.க.த.க. பாடசாலை, மணற்காடு றோ.க.த.க. பாடசாலை, தாளையடி றோ.க.த.க. பாடசாலை, கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலை ஆகியவை சீரமைக்கப்படவுள்ளன. (ஒ-170)



ஹோமியோபதி வைத்தியர்களான க.லோகேஸ்வரன், திருமதி கி.தவமணிதேவி ஆகியோர் சமாதான நீதிவான்களாகப் பதவியேற்றமையையிட்டு அண்மையில் தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தில் பாராட்டுவிழா நடத்தப்பட்டது. ஆதிமுத்து மாரியம்மன் ஆலயப் பரிபாலன சபைச் செயலாளர் மா.சிவராசா க.லோகேஸ்வரனுக்கு மலர் மாலை அணிவிப்பதைப் படத்தில் காணலாம். திருமதி கி.தவமணிதேவி, தொல்புரம் அ.மி.த.க. பாடசாலை ஆசிரியை திருமதி பா.விஜயராணி, வடபிராந்திய இந்துப் பேரவைச் செயலாளர் பொ.சிவலோகநாதன், சமூகமணி சி.சி.வரதராசா, ஹோமியோபதி டாக்டர் எஸ்.ஆனந்தராசா ஆகியோரும் படத்தில் உள்ளனர். *(படம்: தொல்புரம் செய்தியாளர்)*

# மலையகச் சிறுவனின் மரணம்: தற்கொலையா? கொலையா?

## மனித உரிமைகள் அமைப்புகள் கேள்வி

கொழும்பு ஜம்பட்டா வீதியிலுள்ள வீடொன்றில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த ஹட்டன வெலிஓயா தோட்டத்தைச் சேர்ந்த அர்ச்சுனன லோகநாதன் (வயது-11) என்ற சிறுவனின் மரணத்தில் சந்தேகம் எழுந்திருப்பதாக மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன. அது கொலையாக இருக்கலாம் என்றும் அவை சந்தேகம் வெளியிட்டுள்ளன. இந்த மர்மத்தை துலக்கக் கோரி ஹற்றனில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவும் அவை ஏற்பாடு செய்துள்ளன.

ஹட்டன், வெலிஓயா தோட்டத்தைச் சேர்ந்த அர்ச்சுனன் லோகநாதன் என்ற 11 வயது சிறுவன் கொழும்பு ஜம்பட்டா வீதியில் உள்ள வீடொன்றில் 2004 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இடைத்தரகர் சங்கர் என்ற நபர் மூலம் வேலைக்கு அமர்த்தப்பட்டான். கடந்த 6 ஆம் திகதி மேற்படி தரகர் சங்கரும், கொழும்பில் வேலைசெய்யும் அத்தோட்டத்தைச் சேர்ந்த பெண்ணொருவரும் ஹட்டனில் உள்ள சிறுவனின் வீட்டுக்குச் சென்று லோகநாதன் கடுமையாக சுகவீனமுற்று இருக்கிறார் என்று கூறி சிறுவனின் பெற்றோரைக் கொழும்புக்கு கூட்டிவந்துள்ளனர்.

சிறுவன் மின்சார சுவிச்சில் கைவைத்துவிட்டார் என்றும், குளியல் அறையில் வழுக்கி விழுந்துவிட்டார் என்றும் தெரிவித்தே பெற்றோர் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். இறுதியில் அவர்களது மகன் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார் என்று அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோரை சமாதானப்படுத்த சிறுவனை வேலைக்கமர்த்திய குடும்பத்தினர் 15 ஆயிரம் ரூபா பணத்தையும் வழங்கியுள்ளனர். தமது மகனின் மரணத்தில் சந்தேகம் கொண்ட பெற்றோர், மேற்படி விடயம் பற்றி கண்டி மனித அபிவிருத்தி ஸ்தாபனத்திடம் முறையிட்டுள்ளனர். கொழும்பில் உள்ள பொது நிறுவனம் ஒன்றின் ஊடாக அண்மையில் நீதிமன்றில் இது தொடர்பாக வழக்கு ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# வலி.தென்மேற்கில் வீடமைக்க முதற்கட்டக் கொடுப்பனவு

வலி.தெற்கு,ஜூலை23

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் உலக வங்கி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 75 வீடுகள் அமைப்பதற்கு முதற்கட்டப் பணமாகத் தலா 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இப்பிரதேச செயலர் பிரிவில் இத்திட்டத்தின் கீழ் 85 வீடுகள் அமைப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆயினும், தற்போது 75 வீடுகளை அமைப்பதற்கே நிதி கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீடுகளை அமைப்பதற்கென ஒருவருக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 75 வீடுகளுக்கு முதற்கட்ட வேலைகளைச் செய்வதற்காகத் தலா 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. வீடுகள் கட்ட எடுக்கப்படும் நடவடிக்கையைப் பொறுத்து அடுத்த மூன்று மாதகாலத்துள் இரண்டாம் கட்ட நிதி வழங்கப்படும்.

இப்பிரதேச செயலர் பிரிவில் உள்ள சில்லாலை தெற்கு கிராமத்தில் 11 வீடுகளும், சில்லாலை வடக்கு கிராமத்தில் 20 வீடுகளும், மாதகல் மேற்கு கிராமத்தில் 14 வீடுகளும், மாதகல் கிழக்கு கிராமத்தில் 12 வீடுகளும், மாரீசன்கூடல் கிராமத்தில் 17 வீடுகளும், சண்டிலிப்பாய் வடக்கு கிராமத்தில் 11 வீடுகளுமாக மொத்தம் 85 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. (ஒ-152)

# வருமான மேற்பார்வையாளரின் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை

தென்மராட்சி,ஜூலை23

யாழ்.மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளில் கடமையாற்றும் வருமான மேற்பார்வையாளர்களின் நியமனத் தரநிலை, சம்பள முரண்பாடு போன்ற பிரச்சினைகளைத் தீர்க்க தொழிற்சங்கத்தினர் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளனர்.

அடுத்த வாரம் தொழிற்சங்கப் பிரதி நிதிகள் மாகாண ஆளுநரையும் பொதுநிர்வாக அமைச்சின் செயலாளரையும் சந்தித்து இப் பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

வருமான மேற்பார்வையாளர் சேவையில் சம்பள அளவுத்திட்டம் 1:4இல் வேதனம் பெறுவோர் சம்பள அளவுத் திட்டம் 2:1இற்கு மாற்றுவது பற்றி அப்போது ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது 1:4 சம்பள அளவுத் திட்டத்தில் உள்ள வருமான மேற்பார்வையாளர்கள் தமது நியமனக் கடிதத்தின் இரு பிரதிகளை சபை செயலாளரினால் உறுதிசெய்து எதிர் வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், யாழ்.மாவட்ட உள்ளூராட்சி வருமானப் பரிசோதகர், வருமான மேற்பார்வையாளர் சங்கம், வலி.தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்குமாறு சங்கச் செயலாளர் பொ.கிருஷ்ணகுமார் கேட்டுள்ளார். (ஒ-117)

### நியமனம்

தென்மராட்சி,ஜூலை23

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு ஓய்வூதிய அலுவலர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சங்கானையைச் சேர்ந்த நடேசு யசோதரூபி என்பவரே இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (ஒ-117)

# சிங்கள இளைஞர் உயிரிழப்பால் மத்துகம தோட்டப் பகுதியில் பதற்றம்

## தமிழர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர்

களுத்துறை மாவட்டம் மத்துகம, பாந்திய தோட்டத்தில் பெரும்பான்மையின இளைஞரொருவர் தாக்குதல் சம்பவமொன்றில் உயிரிழந்ததையடுத்து அந்தப் பகுதியில் வசிக்கும் தமிழர்களைப் பெரும்பான்மை இனத்தவர்கள் அச்சுறுத்த ஆரம்பித்திருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த திங்கட்கிழமை பாந்திய தோட்டத்தில் திருடுவதற்காக வந்தனர் எனக் கூறப்படும் பெரும்பான்மை இளைஞர் சிலருக்கும் தோட்ட இளைஞர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது என்று பொலீஸார் தெரிவித்தனர். இதில் சிங்கள இளைஞரொருவர் படுகாயமடைந்தார். நாகொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

இதனையடுத்து தோட்டத்திற்குள் அத்துமீறிப் பிரவேசிக்க முயன்ற பெரும்பான்மையின இளைஞர்கள் குழு வொன்றை பொலீஸார் தடுத்து நிறுத்தினர். இந்தச் சம்பவத்தினால் அங்கு பதற்றம் நிலவுகிறது. (க)

### வலுவூட்டல் பயிற்சி

வடக்கு - கிழக்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய யாழ்.மாவட்ட வள நிலையத்தில் முன்பள்ளி இணைப்பாளர்களுக்கான வலுவூட்டல் பயிற்சிநெறிகள் நடைபெற்று வருகின்றன.

போரூட் நிறுவனத்தின் நிதி உதவியுடன் தமிழர்புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் இந்தப் பயிற்சி நெறியை நடத்தி வருகின்றது.

கடந்த 19ஆம் திகதி இந்தப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வலய, பிரதேச முன்பள்ளி இணைப்பாளர்களுக்கு இப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. (ஒ-203)


# அறிவித்தல்

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

சுன்னாகம் கொத்தியாலடி மயானம், குப்பை கொட்டும் பகுதி என்பன பிரதேசசபையினால் எல்லை வேலியிட்டுப் பாதுகாக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு எல்லைகள் தொடர்பில் திருப்தியின்மை இருப்பின் தகுந்த ஆதாரங்கள், ஆவணங்களுடன் 05.08.2005 இற்கு முன் எமது அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

மேலும் எமது பிரதேச சபைக்குட்பட்ட ஏனைய மயானங்களின் எல்லைகளும் நிர்ணயிக்கப்படவுள்ளதால் அபிவிருத்திச் சங்கங்கள், பொதுமக்கள் ஆகியோர் எல்லைகள் தொடர்பான உரிய ஆவணங்களை எமக்குச் சமர்ப்பித்து எல்லைகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**திருமதி.ச.சொக்கலிங்கம்,**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
*22.07.2005*
(சி/44297)(32-21-14-15)



# 3ஆம் ஆண்டு நினைவு நாள்

தோற்றம் *18 - 04 - 1970*



மறைவு *24 - 07 - 2002*

## அமரர் சிவலை தர்மகுலசிங்கம் (தர்மா)

*மூன்றாண்டு மறைந்தாலும் ஆறவில்லை எம்மனம்*
*தீராத வேதனையால் தினந்தினம் துடிக்கின்றோம்*
*மாறாத துன்பந்தான் மனதை வாட்டுகிறதே*
*எந்நாளும் உன்னை நினைத்தே நாமிங்கு*
*வாழ்கின்றோம்.*

நினைவுகளுடன்:
அம்மா, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

தகவல்: இ.ஈஸ்வரி
(சகோதரி)
கைதடி தெற்கு,
கைதடி.
(38042)(21-39-14-15)



# Post of Dental Surgeon

**Excellent opportunity for enthusiastic energetic and competent dental surgeon to develop lucrative practice with very attractive salary and benefits. Candidates with the following qualifications are required to apply.**

1. **A Registered dental practitioner currently registered with the medical council of Srilanka.**
2. **Able to communicate in Tamil**
3. **Able to network with I/NGO and government medical institutions.**
4. **Must have previous experience in developing dental practice.**
5. **Should be able to work in the north and east districts.**
6. **Should be able to work in mobile dental clinics.**
7. **Should work six days a week.**
8. **Suitable candidates will be paid a salary of Rs. 25000/- per month.**

**Please send your curriculum vitae (CV) to the following address before 15th August 2005.**

**Head office,**
**Centre for Health Care,**
**A9 Road,**
**Kilinochchi,**
**Srilanka.**
(C/44296)(21-*14-15*)



# பணி நிலை வேண்டுகை

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தில் கடமையற்றுவதற்கு கீழ்க்காணும் பணி நிலைக்கு உரியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பல் வைத்தியர்


*தகைமைகள்:*

1. **விண்ணப்பதாரர்கள் இலங்கை சுகாதார மருத்துவ சபையில் பதிவுசெய்தவராக இருக்க வேண்டும்.**
2. **தமிழில் நன்றாகத் தொடர்புகொள்ளக் கூடியவராக இருக்கவேண்டும்.**
3. **சர்வதேச , சசார்பற்ற நிறுவனங்களுடனும், இலங்கை அரசாங்க மருத்துவ நிறுவனங்களுடனும் இணைந்து கடமையாற்றக் கூடியவராக இருக்க வேண்டும்.**
4. **அனுபவம் பெற்றவராக இருக்கவேண்டும்.**
5. **வட க்கு-கிழக்கின் சகல மாவட்டங்களிலும் கடமையாற்றக் கூடியவராக இருக்கவேண்டும்.**
6. **நடமாடும் பல் வைத்திய சிகிச்சைப் பிரிவில் கடமையாற்ற வேண்டும்.**
7. **வாரத்தில் 6 நாள்கள் கடமையாற்ற வேண்டும்.**
8. **தகுதியும் அனுபவமுள்ளவர்களுக்கு வேதனமாக மாதம் ரூபா 25000/- வழங்கப்படும்.**

**உங்கள் விண்ணபப்பத்துடன் சுய விவரக் கோவையையும் 2005ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.**

***விண்ணப்பம் அனுப்பும் முகவரி:***

**தலைமைக் காரியாலயம்,**
**நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம்,**
**A-9, பிரதான வீதி,**
**கிளிநொச்சி.**
(C/44295)(21-*14-15-39*)



தமிழீழ மாணவர் அமைப்பு, தமிழீழ விளையாட்டுத்துறை ஆகியவற்றுடன் இணைந்து யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றுவருகிறது.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் முறையே பற்றீஸியன் வி.க. எதிர் ஜொனியன்ஸ் வி.க., ஓல்கோல்ட் வி.க. எதிர் ஜொலிஸ்ரார் வி.க., கோப்பாய் வி.க. எதிர் உடுவில் வி.க. ஆகியவற்றிடையே நடந்த ஆட்டங்களின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. *(படங்கள் : தமிழினியன்)*

# கூடைப்பந்தாட்டத்தில் வெற்றிபெற்ற அணிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை23

தமிழீழ மாணவர் அமைப்பு, தமிழீழ விளையாட்டுத்துறை ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி யாழ்.இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்தப் போட்டியில் நடந்த ஆட்டங்களின் சில முடிவுகள் வருமாறு:-

✱ ஜொனியன்ஸ் வி.க வும் பற்றீசியன்ஸ் வி.கவும் மோதியதில் 33:26 என்ற புள்ளி அடிப்படையில் பற்றீஸியன்ஸ் வி.க. வெற்றி.

✱ ஜொலிஸ்ரார் வி.கவும் ஒல்கோல்ட்ஸ் வி.கவும் மோதியதில் 47:31 என்ற புள்ளி அடிப்படையில் ஜொலிஸ்ரார் வி.க வெற்றி.

✱ உடுவில் வி.கவும் வட்டபிளை வி.கவும் மோதியதில் 39:24 என்ற புள்ளி அடிப்படையில் உடுவில் வி.க. வெற்றி.

✱ உடுவில் வி.கவும் கோப்பாய் வி.கவும் மோதியதில் 51:39 என்ற புள்ளி அடிப்படையில் கோப்பாய் வி.க. வெற்றி.

(3-190-203)

# தென்மராட்சி மாணவிகள் எழுவர் தேசியமட்டப் போட்டிக்குத் தெரிவு

தென்மராட்சி,ஜூலை23

வவுனியாவில் நடந்த மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டிகளில் பங்குபற்றிய தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவிகள் எழுபேர் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள் ளனர்.

இத்தகவலை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெ.இருதயநாதன் தெரிவித்தார்.

தெரிவுசெய்யப்பட்ட மாணவிகளின் விவரம் வருமாறு:-

த.தர்சிகா - சாவகச்சேரி மகளிர் கல்லூரி, எஸ்.சத்தியபாமா - கச்சாய் அ.த.க. பாடசாலை, என்.ஜனோதா - மட்டுவில் சரஸ்வதி வித்தி., எஸ்.நீருஜா - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, எம்.முகுந்தா - வரணி ம.வி., எம்.செல்வகுமாரி - கொடிகாமம் அரசினர் வித்தி., வை.சங்கீர்த்தனா - சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை.

(3-117)

## விளையாட்டு விழாக்கள்

வலி.தெற்கு,ஜூலை23

உடுவில் இந்து இளைஞர் மன்ற பாலர் பாடசாலை விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் மன்றத் தலைவர் தி.தியாகச் சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை கண் வைத்திய நிபுணர் டாக்டர் கா.குகதாசன் இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## விளையாட்டு

சமூகஜோதி கா.கணேசதாசன், தேசிய சேமிப்பு வங்கி உதவி முகாமையாளர் சி.நந்தகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்வர். (3-152)

✱ ✱ ✱

யாழ். சிவன் பாலர் பாடசாலை முன்பள்ளிக் கல்வி விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலைப் பொறுப்பாசிரியர் ஜெயபாலன் தமிழ்ச்செல்வி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் கலந்துகொள்வார். (த-202)

**'உதயன்' ஊடக அனுசரணையுடன்**

# மாபெரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி சுன்னாகம் ஸ்கந்தாவில் நடத்த ஏற்பாடு

## யாழ்., வவுனியா, கிளிநொச்சி அணிகளும் பங்குபற்றும்

யாழ்ப்பாணம்,ஜூலை23

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கழகங்களுக்கிடையிலான மாபெரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்று நடத்தப்படவுள்ளது.

தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். மாவட் டப் பிரிவின் ஆதரவுடனும் 'உதயன்' ஊடக அனுசரணையுடனும் ஸ்கந்தா நட்சத்திர விளையாட்டுக்கழகம் இப்போட்டியை நடத்தவுள்ளது.

ஸ்கந்தாவின் மைந்தனும் ஸ்கந்தாவின் கிரிக்கெட் வீரனும் முதலாவது ஸ்கந்தா - மகாஜனா துடுப்பாட்டப் போரின் அணித் தலைவராக இருந்தவருமான அமரர் ஜெயசோதி துஸ்யந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக இப்போட்டி நடத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கழகங்களை எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட 30 ஓவர்களைக் கொண்ட தோற்பந்துக் கிரிக்கெட் போட்டியான இப்போட்டி சுன்னாகம் ஸ்கந்தா மைதானத்தில் நடைபெறும்.

போட்டிக்கான அணிநிரல் ஒழுங்கு எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

சிறந்த துடுப்பாட்ட வீரன், சிறந்த களத்தடுப்பாளன், சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த ஆட்டநாயகன், சிறந்த தொடர் ஆட்ட நாயகன், சிறந்த சகலதுறைவீரன் ஆகியோர் இப்போட்டியில் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும் எனக் கழகத்தினர் தெரிவித்தனர். (3-202)

**தேசிய மட்ட ரெனிஸ் போட்டி**

# யாழ்ப்பாணக் கல்லூரி மாணவிகள் வெள்ளிப் பதக்கம் பெற்றனர்

யாழ்ப்பாணம்,ஜூலை23

மினி ரெனிஸ் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவிகள் இருவர் தேசிய ரீதியில் வெள்ளிப்பதக்கம் பெற்றுள்ளனர்.

அகில இலங்கை ரெனிஸ் சங்கத்தினால் நடத்தப்பட்ட மினி ரெனிஸ் தேசிய போட்டி கொழும்பில் இடம்பெற்றது.

இதில் ஆரம்ப பாடசாலை மாணவிகளான தனுசியா யோகராசா, கிருஸ்ணவேணி யோகராசா ஆகியோர் வெள்ளிப்பதக்கம் பெற்றுள்ளனர்.

மேற்படி இருமாணவிகளும் ஆரம்பப் பாடசாலை மேற்பார்வை அதிபர் வண. ஜி. நடராஜாவினால் விருது, சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை - மேசைப் பந்தாட்டத்தினையும் மாவட்ட மட்டம், மாகாண மட்டம் மற்றும் தேசிய மட்டத்திற்கு கொண்டுசெல்லவும் துரித பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகக் கல்லூரி அதிபர் நோயல். ஏ.விமலேந்திரன் தெரிவித்தார்.

(3-185)

**17 வயதுப் பிரிவு கிரிக்கெட்**

# இரு ஆட்டங்களில் விக்ரோறியா வெற்றி

அஸ்ரா கிண்ணத்திற்காக நடத்தப்பட்டுவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 17 வயதுப் பிரிவில் இருகட்டங்களில் விக்ரோறியாக் கல்லூரி வெற்றிபெற்றது.

முதலில் நடந்த ஆட்டத்தில் துடுப்பெடுத்தாடிய மகாஜனா அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றது. கயூரன் 16 ஓட்டங்களைப் பெற்றார்.

ரகுராம், கணரூபன் முறையே 3 விக்கெட்டுக்களையும் சிவதாஸ் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி 9 விக்கெட்டுகளை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது.

சங்கர் 39 ஓட்டங்களையும் கஜேந்திரன் 23 ஓட்டங்களையும் கணரூபன் 20 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

தொடர்ந்து மீண்டும் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி 130 ஓட்டங்களை மட்டும் பெற்று ஆட்டமிழந்தது. கயூரன் 26 ஓட்டங்களையும் பெற்றார்.

விக்ரோறியாக் கல்லூரி 33 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்தபோது போட்டிக்கான ஆட்ட நேரம் முடிவடைந் திருந்தது.

இந்நிலையில் புள்ளிகளின் அடிப்படையில் விக்ரோறியாக் கல்லூரிக்கு வெற்றிபெற்றது என அறிவிக்கப்பட்டது.

17 வயதுப் பிரிவில் பெரியபுலம் மகா வித்தியாலயத்திற்கும் விக்ரோறியாக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற மற்றோர் ஆட்டத்தில் விக்ரோறியாக் கல்லூரி இனிங்ஸால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சி மூலம் முதலில் துடுப்பெடுத்தாடிய பெரியபுலம் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றது. மோகன் 17 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.சிவதாஸ் 7 விக்கெட்டுகளையும் ரகுராம் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியா அணி 9 விக்கெட்டுகளை இழந்து 180 ஓட்டங்களுடன் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

சங்கர் 46 ஓட்டங்களையும் கஜேந்திரன், சுதர்சன் ஆகியோர் முறையே 42 ஓட்டங்களையும் சிவதாஸ் 20 ஓட்டங்களையும் பெற்றனர். மோகன் 5 விக்கெட்டுகளையும் வின்சிலோ 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பெரியபுலம் மகாவித்தியாலயம் சகல விக்கெட்டுகளையும் இழந்து 105 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

கஜீவன் 24 ஓட்டங்களையும் நிசாதன் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

கணரூபன் 4 விக்கெட்டுகளையும் ரகுராம் 3 விக்கெட்டுகளையும் சிவதாஸ் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.(3-119-203)

**ஆஷஸ் தொடரின் முதலாவது டெஸ்ட்**

# முதல்நாள் ஆட்டத்தில் விக்கெட் மழை

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஆஷஸ் தொடரின் முதலாவது டெஸ்ட் ஆட்டம் லண்டன், லோர்ட்ஸ் மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பித்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடியது ஆஸ்ரேலிய அணி. ஜன்ரின் லாங்கர், ஹெய்டன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர். 35ஓட்டங்களை அணி பெற்றிருந்த போது ஹெய்டன் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவருக்கடுத்து களமிறங்கிய பொன்ரிங் (9), லாங்கர் (40), மார்ட்டின் (2), கிளார்க் (11) ஆகியோர் விரைவாக ஆட்டமிழக்க 87 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து ஆஸ்திரேலியா பரிதவித்தது.

இவர்களுக்குப் பின் வந்த கெட்டிச் (27), கில்கிறிஸ் (26), வோர்ன் (28) ஆகியோர் சற்று ஓட்டங்களைக் குவித்தாலும் ஹார்மிஷனின் துல்லியப் பந்துவீச்சில் பின்வரிசை விக்கெட்டுகள் மளமளவென விழுந்தன. இறுதியில் ஆஸ்ரேலியா முதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 190 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஹார்மிஷன் 5 விக்கெட்டுகளையும், ஜோன்ஸ், பிலிங்டொவ் ஆகியோர் தலா2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியும் மெக்ராத்தின் வேகத்தில் தடுமாறியது. நேற்று முன்தினம் - முதல்நாள் ஆட்டநேரமுடிவின் போது 7 விக்கெட்டுகளை இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான திரஸ்கொதிக் (4), ஸ்ட்ராவ்ஸ் (2) ஆகியோர் விரைவாக வெளியேறினர். இவர்களுக்குப் போட்டியாக பின்வந்த வீரர்களும் அடுத்தடுத்து வெளியேறினர். பீற்றர்சன் மட்டும் 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளார்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக மெக்ராத் 5 விக்கெட்டுகளையும், லீ 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். (க)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

DELICA L 300 DIESEL வான் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: உடுப்பிட்டி வீதி, மாலு சந்தி, நெல்லியடி.
T.P.:0777676783 (37992)

பதிவுசெய்யாத 400 km பாவனை செய்த Scooty Pep மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 600 5338 இல. 490, கண்டி வீதி, அரியாலை (தபாற் கடைச் சந்தி). (38036)

பாவித்த ஓடுகள், 6x4 சதுர அடி இரு படி யன்னல், ¼ இஞ்சி தடிப்பான கண்ணாடி வகைகள் (கட்டடங்களில் இருந்து உடைத்து எடுக்கப்பட்ட கற்கள் இலவசம்) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 22, மருதடி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 6482. (38045)

## கார் விற்பனைக்கு

நிசான் சனி கார் (சில்வர்கலர்) (Full Option) சுப்பர் சலூன் கார் குளிருட்டப்பட்டது. விற்பனைக்குண்டு. தொடர்பு: 396, நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோயிலடி, முன்னைய உதயன் பணிமனை ஒழுங்கை, யாழ்ப் பாணம். சந்திக்க வேண்டிய நேரம் 8.30 a.m. - 5 p.m. (38048)

## வீணை விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஏகாந்த வீணையும், அதற்குரிய ஸ்ராண்டும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 43A , சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (38044)

## நாய்குட்டிகள் விற்பனைக்கு

1½ மாதம் நிரம்பிய அல்சேஷன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: பொ.கமலநாதன், கலையரசு வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய். (38040)

காவலுக்குரிய Great Dane நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38051)

## வீடு, காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கில் 2 பரப்பு 11 குழி காணியிலமைந்த வீடு விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் மாலை 6 மணிக்குப் பின்பு தொடர்புகொள்ளவும். தொடர்பு: T.P.:0114613157 (37979)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

1,2, 3 மாதம் நிரம்பிய கலப்பின பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. ஒரு நாள் கலப்பினக் குஞ்சுகளையும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: ச.ஜெகன், நெசவுசாலை ஒழுங்கை, கோண்டாவில், இருபாலை வீதி, கோண்டாவில். (38043)

## இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் 1 Kg 160/-. சுத்தம் செய்தது 240/-. மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு.கல்பேட் மற்றும் புறொயிலர் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: New R.S.K Farm, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். New R.S.K Farm, பெரிய மதவடி, மானிப்பாய் றோட், உடுவில். (37663)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தினமும் சுத்தம் செய்து மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். மாஸ் வகைகளும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: S.சிவகுமாரன் கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல் செற் அருகிலுள்ள புலவனார் வீதி. (38056)

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம் (Electronic நிறுவை). தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (37756)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டுமுறை தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள் (ரூபா 40) பேட்டுக் குஞ்சுகள் 25-07-2005 திங்கட்கிழமை பிற்பகல் முதல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை நெல்லியடிக் கிளைகளிலும் சுட்டிபாம் - வட்டுக் கோட்டை, சந்நிதி ப்ாம் - தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன்-சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர் ஆகிய இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். (37948)

## திருமண சேவை

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்கள் உண்டு. உங்கள் பிள்ளைகளின் வளமான வாழ்வுக்கு ஏற்ற மணமக்களைத் தெரிவுசெய்ய உடனே நாடுங்கள். த.சிவானந்தன் (பிரபல சோதிடர்), 264, பலாலி வீதி, கந்தர்மடம். (38010)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்து 1975ஆம் ஆண்டு, கிரகபாவம் 80, 8இல் செவ்வாய், 5½ அடி உயரமுள்ள அழகிய, தொழிலிலுள்ள பெண்ணுக்கு யாழ்.இந்து கௌரவ குடும்பத்து உள்நாட்டிலோ, வெளி நாட்டிலோ தொழில் புரியும் மணமகன் தேவை. முழு விவரம் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2651, மே/பா உதயன். (38023)

1969 ஆம் ஆண்டில் பிறந்த, கிரகபாவம் இருபது உள்ள அழகிய, சிறப்பான, சீதனமுள்ள தொழிலற்ற பெண்ணிற்கு செவ்வாயற்ற, ஏதாவது சொந்தத்தொழிலுள்ள யாழ்.இந்து கௌரவ குடும்பத்து மணமகன் தேவை. முழுவிவரம் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: விளம்பர இலக்கம் 2648, மே/பா உதயன். (38020)

## மணமகன்கள் தேவை

1973இல் பிறந்த லண்டன் P.R உடைய கணக்காளர், கிரகபாவம் 5, 1979இல் பிறந்த (பிரான்ஸ்) P.R. உடைய மூல நட்சத்திரம் உடையதும், 1981இல் பிறந்த (கனடா) P.R. கிரகபாவம் 28 மூல நட்சத்திரம் உடையவர்களுமான மணப்பெண்களுக்கு தராதரமுள்ள மணமகன்கள் தேவை. ஜாதகம், முழு விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு வி.இல.2650, மே/பா உதயன். (38022)

## மணமகள் தேவை

1965 ஆண்டில் பிறந்த, கிரக பாவம் 45 உள்ள வர்த்தகர் மணமகனுக்கு, 1968 Electronic, வர்த்தகர் கிரகபாவம் 20 உள்ள மணமகனுக்கும் (சகோதரர்கள்) அழகான, தொழிலுள்ள மணப்பெண்கள் தேவை. முழுவிவரம் ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: விளம்பர இல. -2649, மே/பா உதயன். (38201)

1973 ஆம் ஆண்டில் பிறந்த, வங்கி உத்தியோகத்தர், எட்டில் செவ்வாயும் கிரகபாவம் இருபத்தெட்டும் உள்ள மணமகனுக்கு அரச தொழிலுள்ள யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. ஜாதகம், முழு விவ்ரத்துடன் தொடர்பு: கொள்ளவும் தொடர்பு: விளம்பர இல. 2652, மே/பா உதயன். (38024)

யாழ்.இந்து கௌரவ குடும்ப பிரித்தானியாவில் குடியுரிமை உள்ள 1976 ஆயிலியம், கடகராசி, 1இல் செவ்வாய் 36 கிரக பாவம் 5'7" உயரம் B.A. (பொருளியல்), CIMA முகாமையாளர் மணமகனுக்கு அழகான படித்த மணமகள் தேவை. மணமகன் யாழ். வந்துள்ளார். தொடர்பு: சிவாலயா, 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். T.P.: 021 222 7844. (38032)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்து 1975ஆம் ஆண்டு கிரகபாவம் - 17 பிரதேச செயலர் பதவியில் உள்ளவருக்கு படித்த குடும்பத்திலிருந்து தொழிலில் உள்ள அழகான மணமகள் தேவை. முழுவிவரம் ஜாதகத்துடன் தொடர்புகொள்ளவும். மே/பா உதயன் விள.இல.2653. (38025)

## தவறிவிட்டது

சகாயபுரம், மாதகல் என்ற முகவரியை உடைய ஆசீர்வாதம் அன்ரன் குணபாலன் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (833322036V) வி. அ. அட்டையும் (0905025491) மரியதாஸ் கெலஸ்ரினா என்பவருடைய வி. அ. அட்டையும் (09055000704) 21.07.2005 வியாழக்கிழமை யாழ்ப்பாண பஸ்தரிப்பு நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கண்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். (38053)

## வீடு வாடகைக்கு

கொக்குவில், பிரம்படி ஒழுங்கை / மில் ஒழுங்கையில் 3 பரப்புக் காணியில் 4 அறைகளுடன் அண்மையில் கட்டப்பட்ட கார் தரிப்பிடத்திற்கான இடவசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. உடன் தொடர்புகொள்ளவும் (உடனடியாகக் குடியிருக்கக்கூடிய வீடு). தொடர்பு: T.P.: 0773151641. (38015)

## வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்தம் வாடகைக்கு. இருபாலாருக்கும் மோட்டார் சைக்கிள், மோட்டார் கார் வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன் குளிரூட்டப்பட்ட திருமணக் காரும் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 360/10, பிரதான வீதி, (பஸ்தியன் சந்திக்கு அருகில்) யாழ்ப் பாணம்.T.P.: 0777 593722, 0776-991899 (38049)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை23

கோப்பாய் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான அவசரக் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி பாலர் பகல் விடுதியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் கோப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு கோப்பாய் முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவர் கு.கஜேந்தினி கேட்டுள்ளார். (3-203)


### விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்- போன் சொப்**

10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திரீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.

**மெகா** புலமைப்பரிசில் பரீட்சை **அறிவித்தல்**

10-07-2005 ஞாயிறு அன்று நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணவர்களின் பதிவுகள் தற்பொழுது ஆரம்பமாகியுள்ளன. மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே உள்ளதால் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**ASIAN COMPUTERS**

• யாழ்ப்பாணம் • சுன்னாகம் • சாவகச்சேரி • நெல்லியடி • கிளிநொச்சி (கணினியியல் கல்லூரி)


### 31ஆம் நாள் நினைவலைகள்



பிறப்பு 18 - 03 - 1938

இறப்பு 23 - 06 - 2005

**அமரர் ஜோண் அந்தோனிமுத்து**

(முன்னாள் ஊழியர் சிமெந்து தொழிற்சாலை)

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பிலும் வாழ்வர்"
(யோவான் 11:25)

அன்போடும் பண்போடும் எமை வளர்த்து
பாசத்தோடு எமை வாழ வைத்து
எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு
இறைவனோடு இன்புற்று வாழ ஒன்றுபட்டீர் ஐயா!
மாதம் ஒன்றும் ஆனது ஐயா!
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சைவிட்டு நீங்காது ஐயா
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை
அனுதினம் வேண்டுகின்றோம்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய் (38061)(21-19-18)

குடும்பத்தினர்.

### நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

18 ஆவது ஆண்டு அஞ்சலி



அமரர்
**எஸ்.காங்கேசன்**

2 ஆவது ஆண்டு அஞ்சலி



திருமதி **கதிரமலை சின்னத்துரை**

22.01.1957 ← தோற்றம் → 08.07.1927
18.07.1987 ← மறைவு → 23.07.2003

பந்தங்கள் எல்லாம் பார்த்திருக்க பரலோகம் சென்றீர்கள்
மறக்கமுடியவில்லையே மனத்தில் நிறைந்திட்டீர்
எம் துயரம் தீர்த்திடவே எம்மை நாடி வந்திடுவீர்!
ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

- குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி: கிளானை, கொல்லங்கலட்டி.
தற்காலிக முகவரி: கல்வளை, சண்டிலிப்பாய்.

(ச-44298)
(39-21-19-18)

## கூட்டங்கள்

யாழ்ப்பாண,ஜூலை23

ஐ.நா.அபிவிருத்தி திட்டத்தின் மாவட்ட மீளாய்வுக் குழுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் கே. கணேஸ் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (204-202)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை23

யாழ்.மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்வது தொடர்பான குழுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது என யாழ். செயலக பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் வே.சாம்பசிவம் தெரிவித்துள்ளார். யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக்கூட்டத்தில் திணைக்களத் தலைவர்கள் கலந்துகொள்வார்கள். (3-204-202)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை23

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் திட்டங்கள் தொடர்பான மாவட்ட மீளாய்வுக் குழுகூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் கே. கணேஸ் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் திட்டங்களுடன் தொடர்புடைய திணைக்களத் தலைவர்கள் கலந்துகொள்வர். (3-204-202)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை23

உடுவில் பிரதேச முன்பள்ளிகள் இணைந்து நடத்தும் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் தி.அன்ரலீனஸ் தலைமையில் இணுவில் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சு.ஜெயராஜும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாம பிரதேச சபை செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் சி.சிவனேயன், இணுவில் மத்திய கல்லூரி அதிபர் திரு. துரை எங்கரசு, கிராம சேவையாளர் க. ரவீந்திரன், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய பிரதேச இணைப்பாளர் செல்வி க.லோஜினி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள். (3)

## சுயதொழில் வாய்ப்பு நிதி ஒதுக்கீடு

நல்லூர்,ஜூலை23

நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலைய மகளிர் அமைப்பைச் சேர்ந்தவர்களிடையே சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது.

இதற்கென பாரதி மன்ற மகளிர் அமைப்புக்கு இந்த ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் 85ஆயிரம் ரூபாவை மாவை சேனாதிராசா எம்.பி. வழங்கியுள்ளார். (3-111)

# அன்று இட்ட தீயினால்....

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாள்களாக வாய்மூடி மௌனியாகப் பார்த்துக்கொண்டிருந்த ஜனாதிபதி ஜே.ஆர்.கலவரத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

அப்போதுகூட இடம்பெற்ற துக்ககரமான சம்பவங்களுக்கு அனுதாபம் கூடத் தெரிவிக்காது மமதைச் செருக் குடன் 'எமது சிங்கள இனம் 1956 ஆம் ஆண்டுமுதல் தமிழ் மக்கள் மீது கொண்டிருந்த நம்பிக்கையீனத்தின் வெளிப்பாடே இந்த இனக்கலவரம். சிங்கள மக்களுக்கு மனக் குமுறல்கள் இருக்குமானால் அவர்கள் வன்முறையில் ஈடுபடுவது நியாயமே'. என்று சிங்களக் காடையர்களின் மனிதாபிமானமற்ற செயற்பாடுகளை நியாயப்படுத்திக் கருத்து வெளியிட்டார் குள்ளநரியென வர்ணிக்கப்பட்ட ஜனாதிபதி ஜே.ஆர்.

### காமினியின் கூற்று

அதேவிதத்தில் அன்றைய அரசில் அமைச்சராக இருந்த காமினி திஸாயக 'தமிழர்களைத் தாக்கியவர்கள் சிங்களவர்கள் தானென்றாலும், அவர்களைக் காப்பற்றியவர்களும் சிங்களவர்களே. தமிழர்களுக்கு உதவ இந்திய இராணுவம் இங்கு வரமுயன்றால் அவர்கள் வருவதற்கு முன்னரே தமிழர்கள் அனைவரையும் சிங்களவர்கள் ஒட்டுமொத்தமாக அழித்து விடுவர்' எனப் பூச்சாண்டி காட்டிக் கருத்து வெளியிட்டார்.

இவை உதாரணங்கள் மட்டுமே. சிங்கள ஏகாதிபத்தியவாத, இனவாதப் போக்குக் கொண்ட அரசியல்வாதிகள் அத்தனை பேரும் 83 இனக் கலவரம் குறித்து மனம் வருந்தியதில்லை. மாறாக மமதையோடு வீரம் பேசவே செய்தனர். அதேவேளை, வெலிக்கடைச் சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ்க்கைதிகள் 54 பேரை மிலேச்சத்தனமாக சிங்களக் காடையர்கள் கசாப்புக் கடையில் மிருகங்களைக் கொலை செய்வது போல வெட்டியும் கொத்தியும் துடிக்கத் துடிக்க கொலை செய்ததன் பின்னணியில் அரசியல்வாதிகள் பலரும் சம்பந்தப்பட்டிருந்ததாக செய்திகள் வெளிவந்தன. வெறும் ஒப்புக்கு இவைகளுக்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டபோதிலும் விசாரணைக் குழுவின் விசாரணைகளினால் கூட உண்மையைக் கண்டறிய முடிந்ததில்லை.

ஆனால், உலகில் வேறு எந்தவொரு நாட்டிலும், எந்தவொரு சந்தர்ப்பத்தி லும் நடந்திராத மிலேச்சத்தனம் வெலிக்கடையில் நிகழ்ந்தது. விசாரணைக் கைதிகளாக அடைபட்டிருக்கும் தாம் தூக்குத்தண்டனை மூலம் இறக்க நேர்ந்தால் தமது கண்களை கண்பார்வையற்றோருக்கு தானமாக வழங்குவதன் மூலம் என்றோ ஒருநாள் விடுதலையடையப் போகும் தமிழீழத்தைத் தம் கண்களால் பார்க்க விரும்புவதாகத் துணிச்சலுடன் நீதிமன்றில் கூறிய சுதந்திர உணர்வுமிக்க குட்டி மணி,தங்கத்துரை ஆகிய வீர இளைஞர்களின் வார்த்தைகளைக் கேட்கச் சகிக்காத சிங்கள மிலேச்சக் காடையர்கள் சந்தர்ப்பம் வாய்த்ததால் அவர்களைத் துடிக்கத் துடிக்க கொலை செய்ததோடு அவர்களது கண்களைத் தோண்டியெடுத்து வெறியாட்டம் ஆடிய செய்தியைக்கேட்டு உலகமே சிங்கள இனத்துக்கு அரக்கர்களென்ற நாமம் சூட்டித் தன் வெறுப்பை வெளிப்படுத்தியதல்லவா?

இன்று, நீண்ட 22 ஆண்டுகளின் பின்னர் 'அந்தக் கறுப்பு ஜூலையை நினைவுகூர்கிறோம். இத்தனை ஆண்டுகால பரிணாம வளர்ச்சியின் பின்னர், அந்தக் கறுப்பு ஜூலைக்காக எத்தனையோ ஜூலை மாதங்களில் சிங்கள இனவாதிகளையும், கடுங்கோட்பாட்டு அரசியல்வாதிகளையும், ஏன் அரச பாதுகாப்புப் படைகளையும் ஜூலை மாதமென்றால் அஞ்சி நடுங்கும் நிலையை உருவாக்கி உயர்ந்து, வளர்ந்து, தமிழ் மக்களின் காவல் அரண்களாக நிமிர்ந்து நிற்கும் விடுதலைப் புலிகள்அமைப்பு போர்க்களத்தில் மட்டுமல்ல அரசியலிலும் எம்மால் சாதிக்க முடியும் என்ற நிலையில்உலக நாடுகளின் பார்வையில் உயர்ந்து நிற்கின்றது.

புனித ஆடிமாதத்தை கறுப்பு ஜூலை ஆக்கித் தம் இனத்துக்கே கரிபூசிக் கொண்டவர்கள், மனித உயிர்கள் குடித்தும், சொத்துக்களைக் கொள்ளையடித்து, உடைமைகளுக்குத் தீயிட்டு அழித்தும் வன்முறை புரிந்தோருக்குஅதேவழியிலேயே பதிலளிக்கப்பட்டது.

அரச அனுசரணையுடன் கூடிய பயங்கரவாத நடவடிக்கைகளின் வடிவங்கள் காலத்துக்குக் காலம் மாறினாலும், அதன் இலக்கு இன்னமும் தமிழர்களின் எழுச்சியை- சுதந்திர உணர்வை நிர்மூலமாக்குவதாகவே காணப்படுகிறது. இராணுவ அரசியல் மூலோபாயங்கள் யாவும் இதன் அடிப்படையிலேயே வகுக்கப்பட்டு வருகின்றன. எனவே தமிழ் மக்கள் முன்னெச்சரிக்கையுடனும் துணிச்சலுடனும் செயற்பட்டாகவேண்டிய முக்கிய காலகட்டம் இது. அதனை மனதில் இருத்தி செயற்பட விழைவது ஒவ்வொரு தமிழ்மக்களினதும் கடமையாய் அமைகிறது. ✱

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது கல்லூரியின் கல்விசாரா ஊழியர்
திரு.சி.வேலுப்பிள்ளை
அவர்களின் அன்புத் தந்தை
அமரர்
**வ.சின்னத்தம்பி**

அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி தினத்தில் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் - ஊழியர்**
**நலன்புரிச்சங்கம்,**
**விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி.** (38070) (29-14-15)

---

## ஆண்டுகள் ஐந்தில்...

மலர்வு 30 - 01 - 1942



உதிர்வு 18 - 07 - 2000

### வேலுப்பிள்ளை கனகரட்ணம்

(KANEX)
(ADP, பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்)

நிஜமாக நீர் இருந்தீர்
இன்று நிழலாகி நிற்கின்றீர்
ஐந்தாண்டுகள் கடந்து நின்றும்
அழகான உம் அன்பு
எமை ஆறாது காத்து நிற்கும்
நீங்காத எம் நினைவு
உமை என்றும் தொடர்ந்துவரும்.

'செல்வகிரி'
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை. (38069) (29-14-15)

**மேகலா, திலீபன்,**
**கோகு, அர்ச்சா.**

---


Jayoda ஜயோதா ජයෝදා

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7110988 முதல் 7119875 வரை சீட்டிழுப்பு இல. 152 திகதி 21-7-2005

வெற்றி எண்கள் 2 7 4 1 3 4 சுப்பர் எண் 23

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,00,00,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,00,000/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 08 | 50,000/- | 4,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 75 | 5,000/- | 3,75,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 744 | 500/- | 3,72,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 7,451 | 50/- | 3,72,550/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 73,841 | 10/- | 7,38,410/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 07 | 5,000/- | 35,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 78 | 1,000/- | 78,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 744 | 100/- | 74,400/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 7,380 | 20/- | 1,47,600/- |
| | | மொத்தம் | 41,95,560/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 47,98,160/- |

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 1,02,07,175/-

தொடர் இல. 6174168 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 ஜூலை 25 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கேகாலை | 7112735-3-03 |
| மொனராகலை | 7113912-6-25 |
| கம்பஹா | 7119285-2-88 |
| பதுளை | 7117520-4-25 |
| கொழும்பு | 7117302-9-48 |
| காலி | 7118553-1-78 |
| மாத்தளை | 7115827-9-92 |
| மாத்தறை | 7112149-4-60 |


---

## 33ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சங்க உறுப்பினரும் வட்டு.மேற்கு
அ.மி.த.க.பாடசாலை அதிபருமாகிய திரு.ஸ்ரீபன் றெக்ஸ்
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி மரியாம்பிள்ளை அலோசியஸ்**

21.06.2005 இல் காலமானார். இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அதிபர் சங்கத்தின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்திஅடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர் சங்கம்,**
**சங்கானைக் கல்விக் கோட்டம்.**
(38074)(42-14-15-29)

---

## துயர் பகிர்கின்றோம்



வடமோடி நாட்டுக்கூத்தை நின்று நிலைக்க வைத்த வட்டு.மேற்கு நாட்டுக் கூத்து அபிவிருத்திக்குழுத் தலைவர் கலாபூஷணம் **அ.முருகவேள்** அவர்களின் மறைவையொட்டி துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமதுஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், துயரில் நாமும் பங்கேற்று அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தலைவரும் கலாசாரப் பேரவையினரும்**
வலிகாமம் மேற்கு பிரதேச செயலகம், சங்கானை.
(சி-44310)(42-24-15-29)

---

## மணல் விநியோக அறிவித்தல்

1. எதிர்வரும் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய தினங்கள் 25.7, 26.7, 27.7 அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான மணல் விநியோகம் நடைபெறமாட்டாது. அந்நாள்களில் உலக வங்கி வீட்டுத் திட்டம், யு.என்.எச்.சி.ஆர். வீட்டுத் திட்டம், சுனாமி வீட்டுத் திட்டம் ஆகியவற்றுக்கான மணல் விநியோகம் நடைபெறும்.

2.திங்கள், செவ்வாய், புதன் குறிப்பிடப்பட்ட உலக வங்கி வீட்டுத்திட்ட அனுமதிப்பத்திரங்களுக்கு இன்று (23.07.2005) சனிக்கிழமையும் மேலதிகமாக மணல் விநியோகம் நடைபெறும்.

மணல் விநியோகப்ப்குதி,
உபயகதிர்காமம்,
புலோலி. (சி.44308) (39-14-15-29)

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செபஸ்ரியாம்பிள்ளை மரியம்மா



வல்வெட்டித்துறை, நெடியகாட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செபஸ்ரியாம்பிள்ளை மரியம்மா 22.07.2005 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தொம்மைப்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை (பெரியதம்பு) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற S.B. குலசிங்கம் (பட்டயக் கணக்காளர்), S.A. இராஜசிங்கம் (இளைப்பாறிய வருமானவரி உத்தியோகத்தர்), S.B. குணசிங்கம், (இளைப்பாறிய நில அளவை நிர்வாக உத்தியோகத்தர்), S.A. இரத்தினசிங்கம் (கட்டட ஒப்பந்தகாரர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பிறிசிலா (ஆஸ்திரேலியா), காமல் (கொழும்பு), செலின் (மட்டக்களப்பு), றஞ்சினி (வல்வெட்டித்துறை) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான S.I. துரைசிங்கம் (சட்டத்தரணி), விறிசித்தம்மா (மங்களம்), மரியமுத்து (செல்லமுத்து), S.J. செல்வரட்ணம் ஆகியோரின் மூத்த சகோதரியும் பிரியதர்சினி (ஆஸ்திரேலியா), தயநிதா (ஆஸ்திரேலியா), செல்வினி (அமெரிக்கா), நிறஞ்சினி, சாந்தினி, சாந்தன் (அமெரிக்கா), பாமினி, றோய், யாழினி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.07.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வல்வெட்டித்துறை கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**செ.அ.இரத்தினசிங்கம் (மகன்)**

நெடியகாடு, வல்வெட்டித்துறை.
T.P. : 077 3222807 (38064) (29-14-15)

### திருமதி வடிவேலு அன்னம்மா



வேலணை கிழக்கு, 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.10, புதிய குடியேற்றத் திட்டம், றக்கா வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வடிவேலு அன்னம்மா அவர்கள் 21.07.2005 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் வடிவேலுவின் அன்பு மனைவியும் சந்திரசேகரன் (லண்டன்), ஞானசேகரன் (ஜேர்மனி), சாமேஸ்வரி (லண்டன்), சதாநந்தி, சாந்தேஸ்வரி, யசோதினி, மனோரஜனி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2005) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் யாழ் . சித்துப்பாத்தி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**கணவர், பிள்ளைகள்.**

இல.10, றக்கா வீதி,
யாழ்ப்பாணம். (38067) (29-14-15)

# மரண அறிவித்தல்

## சிவக்கொழுந்து சின்னத்துரை



யாழ்ப்பாணம், தாவடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சி.சின்னத்துரை 22.07.2005 கொழும்பில் காலமானார்.

அன்னார் யாழ்ப்பாணம் - கொழும்பு சி.சின்னத்துரை அன் பிறதேர்ஸ், கல்கி நிறு வனங்களின் ஸ்தாபகரும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து- கனகம்மா தம்பதியரின் புதல்வரும் சோதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பாலச்சந்திரன், புவனச்சந்திரன், சிவமலர், வசந்தமலர், இந்துமலர், ஞானச் சந்திரன் ஆகியோரின் தந்தையும் வாசுகி, விமலாதேவி சண்முக ட்ணம் (பபுவா நியூகினி), கணேந்திரன் (ஆஸ்திரேலியா), ஸ்ரீஸ்கந்தராஜா (U.K.), ஜெயந்தி ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற மயில் வாகனம், காலஞ்சென்ற சிவஞானம், மகேஸ்வரி (கனடா) ஆகியோரின் சகோதரரும் Dr.சிவந்தன், ஷர்மிலா, சிந்துஜா, சுபத்ரா, சசிதரன், Dr.சியாமா, கஜன், தர்ஷிகா, பிரியா, ஷைலஜா, ரம்யா, சௌமியா, சரண்யா, சாகின்யா ஆகியோரின் பேரனும் மீனாட்சி, பூஜிதா, துவாரகேஷ், கிரண், சந்தோஷ் ஆகியோரின் பூட்டனாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (24-07-2005) ஞாயிற்றுக்கிழமை 27/2, 5 ஆவது லேன், கொள்ளுப்பிட்டி இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மாலை 4 மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு, பொரளை கனத்தை இந்துமயா னத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

27/2, 5th Lane,
Colombo - 3. Phone: 2573627
E.mail: buvana@sltnet.lk

தகவல்:
சி.புவனச்சந்திரன்
(மகன்).

(C/44307)(50-14-15)

# விடைபெறும் வேளையில்...



**திருமதி க.முத்துலிங்கம்**

**உப அதிபர் கிளி.இராமநாதபுரம்**
**மேற்கு அ.த.க. பாடசாலை**

பள்ளியில் ஆசிரியராக - 1984
உப அதிபராக - 1998
இளைப்பாறுகை - 24.07.2005

கிளி.இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக ஆசிரியையாகவும், உப அதிபராகவும் பணியாற்றி நாளை (24.07.2005) ஞாயிற்றுக்கிழமை இளைப்பாறிச் செல்லும் எமது வழிகாட்டியான அன்னைக்கு நன்றியுடன் விடைசொல்கின்றோம்.

இவரது ஆசிரியப்பணி சமூகப் பணியாகவும் தொடர வாழ்த்தும்
(சி-44317)(11-34-38) **2001 க.பொ.த. (சா.த) பழைய மாணவர்கள்.**

# ஈர விழிகளுடன் இரண்டாம் வருட அஞ்சலி

மண்ணில்
24 - 04 - 1953



விண்ணில்
23 - 07 - 2003

## சிற்றம்பலம் ராதாகாந்தி

ஆண்டு இரண்டு ஆனதுவே இன்று - நாம்
கொண்டிருந்த துயர் இன்னும் ஆறவில்லை
ஆண்டாண்டு காலமாய் நாங்கள் இங்கு
வேண்டிடுவோம் சாந்தி கொடு என்றே!

புலோலி கிழக்கு,
புலோலி. (38079)(11-34-38) **குடும்பத்தினர்.**

# உள்ளூராட்சி வாரவிழாவை நடத்துவதற்கு ஏற்பாடு

தென்மராட்சி,ஜூலை23

சாவகச்சேரி நகரசபையினர் இவ்வருட உள்ளூராட்சி வாரவிழாவினை செப்ரெம்பர் 12 தொடக்கம் 18 வரை நடத்த ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றனர்.

உள்ளூராட்சி வாரத்தையொட்டி நூல் வெளியீடும் , சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகள், வர்த்தக நிலையங்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியவற்றின் இடையே போட்டிகள் நடத்தவும் உத்தேசிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

அத்துடன் சிரமதானப் பணிகள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, கலைநிகழ்வுகள் போன்றவையும் உள்ளூராட்சி வாரத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன என நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தெரிவித்தார்.

(எ-117)

# தென்மராட்சி வலய அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி,ஜூலை23

தென்மராட்சி கல்விவலய பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் அறிவித்துள்ளார்.

(எ-117)

# கற்பித்தல் சாதனம் கொள்வனவுக்கு நிதி

குருநகர்,ஜூலை23

முகமாலையைச் சேர்ந்த தம்பையா ரமேஸ் தம்பதியினர், யாழ்.சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயத்திற்கு கற்பித்தல் உபகரணங்கள் கொள்வனவுக்கு என 17 ஆயிரத்து 500 ரூபாவை வழங்கியுள்ளனர் என பாடசாலையின் அதிபர் த.ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

இதேவேளை பிரான்ஸ் நாட்டில் உள்ள சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம் இப்பாடசாலை மாணவர்களின் கழுத்துப்பட்டி வாங்குவதற்காக ரூபா 45 ஆயிரத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளதாகவும் - அ[illegible]ர் மேலும் தெரிவித்தார்.

(எ-51)

# துயர் பகிர்வு



எமது பாடசாலையின் ஊழியர்
**திருமதி மனோநிதி ஜெனநாதன்**
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி கிறேஸ் நேசமலர் செல்லையா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் பிள்ளைகளின் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

'இறைவன் இவருக்கு நித்திய வாழ்வை அளிப்பாராக'

**பாடசாலைச் சமூகத்தினர்,**
(சி-44314)(11-34-38) **நவீல்ட் பாடசாலை - கைதடி.**

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியவரும் தேர்த்திருவிழா உபயகாரரும் பிரபல தொழிலதிபருமான

## சிவக்கொழுந்து சின்னத்துரை

அவர்கள் 22.07.2005 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆலய பரிபாலன சபையினரும் கோண்டாவில் மேற்கு வாழ் மக்களும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உப்புமடம் பிள்ளையார் கோயில்,**
**கே.கே.எஸ் வீதி,**
**கோண்டாவில்.** (38086)(11-34-38) **ஆலய பரிபாலன சபையினர்.**

# 31 ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில்
*21 - 05 - 1943*



விண்ணில்
*23 - 06 - 2005*

அமரர்

## வேதநாயகம் மரிய றெஜீனா


அன்பிற்கும், பண்பிற்கும், பாசத்திற்கும்
ஒளிவிளக்காய்ப் பிரகாசித்து
எமக்கு வளம்குன்றா வாழ்வு தந்த
எங்கள் ஆருயிர்த் தாயே!
உம் திருவுடல் எம்மைவிட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள் மட்டும்
எம்மைவிட்டு நீங்காது.

இன்று (23.07.2005) சனிக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மணற்காடு,
குடத்தனை. (38085)(11-34-38)
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில்
*11 - 02 - 1925*



இறைவனின் அடியில்
*23 - 06 - 2005*

## திருமதி கௌரி நடராசா

திதி : 23.07.2005

**அம்மா! உங்கள் அன்பு முகத்தைக்**
**காணாது ஏங்கித் தவிக்கின்றோம்**
**அம்மா! உங்கள் பாசத்திற்கு நிகர்**
**இப் பூவுலகினில் எதுவுமில்லை.**

யாழ்ப்பாணம், நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த அமரர் திருமதி கௌரி நடராசா அமரத்துவமடைந்த 31 ஆம் நினைவு நாளில் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல தாய் காமாட்சி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மறைவையொட்டி நேரிலும், தொலைபேசியிலும், தபால் மூலமும் துயர்பகிர்ந்த, உதவிகள் புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அமரருக்குக் கடந்த 19 வருடம் வைத்தியசேவைபுரிந்து அவர் இறுதி நிமிடம்வரை திடகாத்திரமாக இருப்பதற்கு உதவிய யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் டாக்டர் (திருமதி) என்.நாகேந்திரா அவர்களுக்கும் ஏனைய வைத்தியர்களுக்கும் தாதிமார்களுக்கும் மற்றும் ஏனைய ஊழியர்களுக்கும் எமது குடும்பம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**3, சேர்பொன் இராமநாதன் வீதி,**
**நாச்சிமார் கோயிலடி,**
**யாழ்ப்பாணம்.**
(38080)(11-34-38)

**ந.அருட்சோதிவர்ணன் (மகன்)**
**ஆசிரியர், யா-சாவகச்சேரி இந்துக்கல்லூரி.**
**ந.கலாவர்ணன் (மகன்)**
**தொழில்நுட்ப உத்தியோகத்தர், வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
*15 - 12 - 1928*



உதிர்வு
*23 - 06 - 2005*

## அமரர் செல்லையா கந்தசாமி

**இன்று (23.07.2005) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் 31 ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

4 ஆம் வட்டாரம்,
வேலணை கிழக்கு. (38089)(11-34-38) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## செல்வரட்ணம் கஜவிந்தன்



இணுவில் கிழக்கு, சிவகாமி அம்பாள் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ரொறண்டோ, கனடாவை வதிவிடமாகவும் கொண்ட செல்வரட்ணம் கஜவிந்தன் 15.07.2005 அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரட்ணம் - இலட்சுமிபிள்ளையின் அன்பு மகனும் திலகராணி - கனகராணி (கனடா), ஜெயராணி (கனடா), இந்திராணி, சதிகன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தனபாலசிங்கம் (தனபாலசிங்கம் வர்த்தக நிலையம், உரும்பிராய்), சிவானந்தநாதன் (கனடா), இலங்கேஸ்வரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் மதுஷா, மதுஷன், லவகுஷன், காருண்யன், நிவேதன், கமசிகா, மகிஷா, அபிஷா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் இன்று (23.07.2005) சனிக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் மேற்கு,*
*உரும்பிராய்.*
**தகவல்:**
**தனபாலசிங்கம்.**
(38091)(11-34-38)

## சுவாம்பிள்ளை இம்மானுவேல் (மனுவேல்பிள்ளை)

சில்லாலையைச் சேர்ந்த சுவாம்பிள்ளை இம்மானுவேல் அவர்கள் நேற்று (22.07.2005) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் பிலோமினா தங்கம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுவாம்பிள்ளை - எலிசபேத் தம்பதியரின் அன்பு மகனும், சூசைப்பிள்ளை, அருட்சகோதரி கிளாறா (செபமாலை தாசர் சபை), திருமதி பாவிலுப்பிள்ளை மரியம்மா, அருட்சகோதரி கிறிஸ்ரியானா (திருக்குடும்ப கன்னியர் சபை), செல்வி பிலோமினா சுவாம்பிள்ளை (இளைப்பாறிய கூட்டுறவு உதவி ஆணையாளர், மன்னார்), அந்தோனிப்பிள்ளை (மறை ஆசிரியர், மறைக்கல்வி நடுநிலையம், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற மரியநாயகம் ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி மரியாதை நிகழ்வுகள் நாளை (24.07.2005) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெறும் பின்னர் சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, அவரது பூதவுடல் சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சில்லாலை,*
*பண்டத்தரிப்பு.*
(38095)(11-34-38)
**தகவல்:**
**அந்தோனிப்பிள்ளை (சகோதரன்).**


**வீடு விற்பனைக்கு**

பண்டத்தரிப்பு சந்தைக்கு அருகில் 100 மீற்றர் தூரத்தில் 3 பரப்புக் காணியில் 3 அறைகளுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
சென்.அன்ரனீஸ் தட்டச்சு நிலையம்,
சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு.
தொலைபேசி இலக்கம் : 077 6271561
(38081)(11-34-38)

**வீட்டு வேலைக்கு பணிப்பெண்ணும், சாரதியும் தேவை**

கௌரவ குடும்பம் ஒன்றுடன் கொழும்பில் தங்கியிருந்து வீட்டு வேலைகள் செய்வதற்கு நற்குணமுள்ள 18 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண்ணும், 45 வயதிற்கு மேற்பட்ட சாரதி ஒருவரும் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
நாளை 24.07.2005 ஞாயிறு
நேரில் சமுகமளிக்கவும்.
தொடர்பு: இல. 32, கச்சாய் றோட்,
சாவகச்சேரி.
(38078)(11-34-38)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்

ஷாம், லைலா,
அஸின், பூஜா நடித்த
**உள்ளம் கேட்குமே** (ரீல்ஸ்)



காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே).
(C/41380)(29-16)

**ராஜா** யாழ்ப்பாணம்

விக்ராந்த், லட்சுமிராய், வடிவேல் நடித்த
**கற்க கசடற** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
(C/41381)(12-17)

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடான அர்ஜுன், சினேகா, கிரண், வடிவேல் நடித்த
**சின்னா** (ரீல்ஸ்)
அடிதடி, காதல், நகைச்சுவை



கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)
(சி-43363)

பொதுக்கட்டமைப்பு:

# நீதிமன்றத் தடையுத்தரவுக்கு அரசின் பதில் மனு 29 இல்

கொழும்பு ,ஜூலை23

ஆழிப்பேரலைக்குப் பின்னரான நடவடிக்கை முகாமைத்துவக் கட்டமைப்பு (பொதுக் கட்டமைப்பு) தொடர்பில் அதன் பல பிரிவுகளுக்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ள நிலையில் எதிர்வரும் 29 ஆம் திகதி அரசாங்கம் தனது பதில் மனுவைத் தாக்கல் செய்யவுள்ளது.

அதன் பின்னர் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் தயாராக இருக்கின்றது என நிதி அமைச்சர் கலாநிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்காக அரசும், புலிகளும் இணைந்து ஏற்படுத்திக் கொண்ட பொதுக்கட்டமைப்பை ரத்து செய்ய வேண்டும் எனக்கோரி ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாக்கல் செய்திருந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம், பொதுக்கட்டமைப்பின் நான்கு பிரதான விடயங்களுக்கு இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது.

- கிளிநொச்சியில் மத்திய செயலகம் அமையக்கூடாது.
- அதன் பிராந்தியசபைத் திட்டங்களை நிர்வகிக்கவோ அல்லது அங்கீகரிக்கவோ முடியாது.
- பிராந்திய நிதியம் உருவாக்க முடியாது.
- திட்ட முகாமைத்துவக் குழுவை அரசின் கீழ் மாற்றவேண்டும்.

- என உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இப்படியான நிலையில், பொதுக்கட்டமைப்பு இயங்குமா? இக்கட்டமைப்புக்குப் புலிகள் தமது பிரதிநிதிகளின் பெயர்களை அறிவித்துவிட்டனரா? அரசாங்கத்தின் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன? - என்று செய்தியாளர்கள் நிதியமைச்சரிடம் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்த நிதியமைச்சர், புலிகள் இன்னும் அவர்களுடைய பிரநிதிகளின் பெயர்களை அறிவிக்கவில்லை. அவர்களுடைய பதிலுக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றோம் - என்றார்.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பால் நாம் சோர்வடைந்துவிடவில்லை. அரச தரப்பில் பதில் மனுத்தாக்கல் செய்வதற்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் நாம் 29 ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் பதில் மனுவைத் தாக்கல் செய்யவுள்ளோம். அதன்பின்னர் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை நாம் ஏற்றுக்கொள்வோம் - என்றும் நிதி அமைச்சர் கூறினார். (எ-க)

## கான்ஸ்டபிள் உட்பட இருவர் பொத்துவிலில் சூட்டுக்குப் பலி

பொத்துவிலில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும், பதிலுக்குப் பொலீஸார் சுட்டதில் சிவிலியன் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இரவுநேர வீதி ரோந்தில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மீது இனம்தெரியாத ஆயுததாரிகள் சுட்டத்தில் பொலீஸ் கான்ஸ்டபிள் எம். வீரதீர (வயது - 37) என்பவர் கொல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பதிலுக்கு பொலீஸார் சுட்டத்தில் அவ்வழியால் சைக்கிளில் வந்துகொண்டிருந்த கூலித்தொழிலாளியான கனகசபை ரஞ்சித்குமார் (வயது - 23) என்பவரே சூடுபட்டு மரணமானார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-க-ரி)

## விபத்தில் இருவர் படுகாயம்!

சங்கத்தானை பெரிய அரசடியில் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

பொதுமகன் ஒருவர் செலுத்தி வந்த மோட்டார்சைக்கிளும் இராணுவத்தினருடைய மோட்டார்சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதாலேயே மேற்படி விபத்து இடம்பெற்றதாக் கூறப்படுகின்றது.

விபத்தில் படுகாயமடைந்த யாழ். பல்கலைக்கழ மாணவனாகிய ந.யசிந்தன் (வயது - 27) சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தில் படுகாய மடைந்ததாகக் கூறப்படும் சிப்பாய் பலாலி இராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (எ-ரி-15-117)

## ஆயுள் சிறை

மூன்று கிராம் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்ட எதிரிக்கு கொழும்பு மேல் நீதி மன்றம் நேற்று ஆயுள் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

2001 ஆம் ஆண்டு ஜூலை 21 ஆம் திகதி மூன்று கிராம் ஹெரோயினுடன் கைதுசெய்யப்பட்ட - கொழும்பு சேதவத்தையைச் சேர்ந்த - அசோக ஜயவர்த்தன என்பவருக்கே கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரத்ன ஆயுள் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். (எ-க)

## பிஸ்டல், சன்னங்கள் பகுப்பாய்வுக்கு ஒப்படைப்பு

பத்திரிகையாளர் சிவராம் படுகொலை தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட புளொட் இயக்க இராணுவப் பொறுப்பாளர் பீற்றரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பிஸ்டலும், சிவராமின் சடலம் கிடந்த பகுதியிலிருந்து மீட்கப்பட்ட சன்னங்களும் அரச இரசாயனப் பகுப்பாய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

நீதிமன்ற உத்தரவுப்படி உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் பாலித்த பெர்னாண்டோ இவற்றை அரச பகுப்பாய்வாளரிடம் ஒப்படைத்து அது குறித்து கடுவெல நீதிமன்றத்துக்கும் அறிவித்திருக்கின்றார். (எ-க)

## ஆசிரியர் நியமனத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றனர்.

தற்போது பாடசாலைகளில் இடைக் காலத் தவணைப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன. சில பாடசாலைகளில் மாணவர்கள் பரீட்சைகளைப் புறக்கணித்துவிட்டு போராட்டத்தில் கலந்துகொண்டனர். ஏனையவற்றில் நண்பகலில் பரீட்சைகள் முடிவடைந்த பின்னர் போராட்டம் நடத்தப்பட்டது.

ஒவ்வொரு இடத்திலும் நூற்றுக்கணக்கானவர்கள் இந்த ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்டனர். பொகவத்தலாவை, வட்டகொட, அக்கரப்பத்தனை போன்ற இடங்களில் சில பாடசாலை மாணவர்கள் வீதி மறியல் போராட்டங்களிலும் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொட்டகலை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் கல்வி கற்கும் மாணவர்களும் இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நேற்று ஊர்வலம் ஒன்றையும் நடத்தினர்.

தமது போராட்டத்துக்கு உரிய தீர்வு கிடைக்காவிட்டால், மலையகம் முழுவதும் முடங் கும் வகையில் ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் நடத்தப் போகிறார்கள் என்று மலையக மாணவர் முன்னணிப் பிரதிநிதி கள் தெரிவித்தனர்.

நேற்றைய போராட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்கள் 'மலையக மாணவர் கல்வியில் மண் அள்ளிப் போடாதே', 'ஆசிரியர் நியமனங்களை உடனே வழங்கு' என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகள் பலவற்றைத் தாங்கியிருந்தனர். (மற்றொரு செய்தி 2 ஆம் பக்கத்தில்) (எ-க)

## மலையக ஆசிரியர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும், மத்திய மாகாண சபை உறுப்பினருமான நயிமுல்ல சார்பில் இதே மாதிரியான மனு ஒன்று ஏற்கனவே உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே.(எ-க)

## வரணியில் மின்தடை

வரணி,ஜூலை23

வரணிப் பிரதேசத்தில் கடந்த ஒரு மாதகாலமாக இரவு நேரங்களில் அடிக்கடி மின் தடை ஏற்படுகின்றது. இடைக்குறிச்சி, மாசேரி, வரணி வடக்கு மற்றும் வரணிப் பகுதி பிரதான வீ[illegible] ஆகிய இடங்களில் ஏற்படும் மின் தடையா[illegible] பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-170)

## போராளிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாதகமான விட்டுக்கொடுப்புகளுக்கு சமிக்ஞைகள் காட்டப்பட்டுள்ளன. இரு தரப்பிற் கும் திருப்திதரக்கூடிய சுமுகத் தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

மீண்டும் திங்கட்கிழமை இலங்கை அரச தரப்பின் பிரதிநிதிகளை நாம் சந்திக்கும்போது தீர்க்கமான முடிவு ஒன்று எடுக்கப்படுமென நம்புகின்றோம் - இப்படி அவர் தெரிவித்தார்.

எனினும், இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சாதகமான நிலையை ஏற்படுத்திய அ[illegible]சம் எதுவென அவர் வெளிப்படுத்த வி[illegible]லை. (எ-க-ரி)

## பொதுக்கட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை சமாதான முயற்சிகளில் முக் கிய பங்குதாரராக, முழு முயற்சி எடுத்து ஜப்பான் கடமையாற்றியது; கடமையாற்றுகின்றது. அதற்கு நாம் நன்றியுடையோம்.

யுத்த நிறுத்தம் ஏற்படவும், சமாதான முயற்சிகளைத் தொடரவும், பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தவும் ஜப்பான் ஆற்றிய முக்கிய பங்களிப்பை நாம் வரவேற்கிறோம். ஆனால், பொதுக்கட்டமைப்பை உருவாக்க பங்களிப்புச் செய்த ஜப்பான் தற்போது பொதுக்கட்டமைப்பு உடன்பாடு செய்யப்பட்ட பின்னர் அதற்கு நேரடியாக நிதி தரமாட்டோம் என்று கூறுவது எமக்குப் பெரும் அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சமாதான முற்சிகள் குழம்பாமல் உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பு சர்வதேச சமூகத்துக்கு உண்டு. யுத்த நிறுத்த உடன்பாடு சிதறாமல் பார்த்துக்கெள்ளும் கடமைப்பாடும் அதற்கு உள்ளது.

அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அரச படைகளின் உதவியோடு செயற்படும் துணைப் படைக் குழுக்களின் கொலை நடவடிக்கைகளால்தான் யுத்தநிறுத்தம் குழம்பும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் 1.8 பிரிவின் படி தமிழர் தாயகத்திலிருந்து இந்தத் துணைக்குழுக்கள் எல்லாம் அப்புறப்படுத்தப்பட்டால் அங்கு நிலைமை சீராகும். கொலைகள் நடக்காது என்ற உத்தரவாத நிலையும் ஏற்படும்.

பொதுக்கட்டமைப்பு உருவாக உழைத்த ஜப்பான் உட்பட சர்வதேச சமூகத்துக்கு அந்தப் பொதுக்கட்டமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தச் செய்வதற்கான பொறுப்பும் உள்ளது. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் மனிதாபிமானப் பிரச்சினை இது என்பதால் ஜப்பான் இதில் தலையிட்டு இந்தத் திட்டத்தை செயற்படுத்த உரிய அழுத்தத்தை கொடுத்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு தெரிவித்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் தற்போதைய அரசியல் நிலமை குறித்துத் தமிழர் தரப்பின் நிலைமையை ஜப்பான் தூதருக்கு விளக்கினர். (எ-க-ரி)

## அச்சு உடைந்ததால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சமயம் லொறியில் இருந்து பாய்ந்து உயிர் தப்பியதாகக் கூறப்படும் சாரதி, லொறி உரிமையாளரின் மோட்டார் சைக்கிளில் ஏறி தப்பி ஓடிவிட்டார் எனவும் - கூறப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விஜயம் செய்த நெல்லியடிப் பொலீஸார் உயிரிழந்தவரின் சடலத்தைப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். (எ-70-173)

## பொதுவேலைத் திட்டத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வார முற்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சித் தவிசாளர் மலிக் சமரவிக்ரமவை அழைத்து நீண்டநேரம் பேச்சு நடத்திய ஜனாதிபதி குமாரதுங்க, தற்போதைய அரசியல் நிலைவரம் மற்றும் ஜனாதிபதி தேர் தல் ஆகியன குறித்து அவருடன் விரிவாகக் கலந்துரையாடினார் எனக் கூறப்பட்டது.

இந்நிலையில் அமெரிக்காவிற்கான தமது விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று அதிகாலை நாடு திரும்பியிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தனது இல்லத்தில் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் நெடுநேரம் மந்திராலோசனை நடத்தினார்.

ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்புக் குறித்தும், அதில் ஆராயப்பட்ட விடயங்கள் பற்றியும் கட்சித் தவிசாளர் மலிக் சமரவிக்கிரமவினால் இங்கு கட்சித் தலைவருக்கு விரிவாக விளக்கப்பட்டது.

பொதுவான அரசியல் வேலைத்திட்டமொன்றின் அடிப்படையில் இணைந்து செயற்பட முன்வருமாறு ஜனாதிபதி விடுத்த வேண்டுகோள் குறித்து அங்கு ஆராயப்பட்டது. நிபந்தனைகளுடன் இவ்வாறான திட்டமொன்றிற்கு இணங்குவது பற்றியும் அங்கு கலந்துரையாடப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலை இவ்வருடம் நடத்த ஜனாதிபதி சந்திரிகா உறுதியளிப்பாரா யின் அவரின் வேண்டுகோளுக்கு இணங்கலாமென்று ஐ.தே.கவின் சிரேஷ்ட உறுப்பினர் கள் சிலர் நேற்றைய கூட்டத்தில் கருத்து வெளி யிட்ட போதிலும் இறுதியில் அந்த முடிவும் உகந்ததல்லவென்று பின்னர் தீர்மானிக்கப்பட்டது எனத் தெரியவந்தது.

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான எண்ணம் இப்போதைக்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு இல்லை என்பதாலும், ஜனாதிபதித் தேர்தலே கட்சியின் தற்போதைய இலக்கு என்பதாலும் அரசுடன் சேர்ந்த பொதுவான அரசியல் வேலைத் திட்டத்தின் கீழ் செயற்படுவதில் அர்த்தமில்லையென்று நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாம்.

கட்சித் தலைவர் ரணிலை ஜனாதிபதி குமாரதுங்க விரைவில் சந்திக்கவுள்ளதால், இந்தத் தீர்மானத்தை அப்போது நேரடியாக அவருக்குத் தெரிவிப்பதென்றும் நேற்று முடிவுசெய்யப்பட்டது. (எ-க)

## மிருசுவில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த 'ட்ரயல் அட்பார்' மன்றுக்கு நியமிக்கப்பட் டுள்ளனர்.

2000 ஆம் ஆண்டு டிசெம்பர் 21 ஆம் திகதி யாழ்.மாவட்டம் மிருசுவிலில் இடம்பெயர்ந்து சென்றிருந்த ஏழுபேர் தமது வீடுகளைப் பார்ப்பதற்காககத் திரும்பிச் சென்ற சமயம்,அவர்களை வெட்டிப் படுகொலை செய்தனர் என இந்த வழக்கில் ஐந்து இராணுவத்தினர் மீது குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணை ஆரம்பமாகி கடந்த 2003 ஆம் ஆண்டுடன் அது தடைப்பட்டுள்ள நிலையில் வழக்கின் எதிரிகள் ஐவரும் தொடர்ந்து விளக்கமறியலில் இருந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான வழக்கு விசாரணை நாளை மறுதினம் மீண்டும் ஆரம்பமாகவுள்ளது. (எ-க)


SKY COMPUTERS (PVT) LTD.
No. 89, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel: 021 - 4590325: Fax: 021 - 4590325
On Line Courses
MS Office XP — Only 2000/=
Desk Top Publishing — 3 Months
Affiliated with Irish International University (U.K)
மற்றைய நிறுவனங்களை விட,
முற்றிலும் வேறுபட்ட பயிற்சி முறை
இலகுவான கட்டண முறை,
தரமான ஆசிரியர்கள்.
Unlimited Practical Hours
E - mail:skycom@wow.lk
(# 44289)(11-13-38) (கச்சேரிக்கு அருகில்)
Today you learn Tomorrow you lead



BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி யாழ்.நகர்.
3 மாத காலத்தில் சரளமாக உரையாட
சிங்களம்
BY:
லீலாக்கிருஸ்ணன்
(38091)(11-13-38)
ஆரம்பம்: - இன்று 23.07.2005
Sat. 4.00 p.m.


## மரண அறிவித்தல்

திருமதி

### இரகுநாதன் அருந்தவஈஸ்வரி

சங்கரத்தை கதிரேச உடையார் வளவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இ.அருந்தவஈஸ்வரி அவர்கள் நேற்று (22.07.2005) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரகுநாதனின் அன்பு மனைவியும், செல்வி செந்திற்செல்வியின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை (23.07.2005) அவரது இல்லத்தில் பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உடையார் வீடு,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.
(38096)(11-34-38)

தகவல்:
செல்வி செந்திற்செல்வி
இரகுநாதன்.
(மகள் - இளைப்பாறிய அதிபர்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.